இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் வழிகாட்டல்கள்

2023

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் வழிகாட்டல்கள்

**2023**

"பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் வழிகாட்டல்கள்" ஆனது 1996ஆம் ஆண்டின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் இல. 21 இன் 10(D) பிரிவின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

## தவிசாளரின் செய்தி
## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசு அரசியலமைப்பின் 14(1)(அ) உறுப்புரையில் அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு உறுதிசெய்யப்பட்டுள்ள உரிமையை, அந்த அரசியலமைப்பில் உள்ளடங்கும் மட்டுப்பாடுகளுக்கு அமைய பாதுகாப்பது ஆணைக்குழுவுக்கும் தனிப்பட்டரீதியில் எனக்கும் மிக முக்கியமான ஒரு விடயமாகும். ஜனாநாயமும் மற்றும் மனித உரிமைகளும் அடிப்படைரீதியில் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்திருப்பதால் மனித உரிமைகளை பாதுகாப்பதனை உறுதிசெய்வதற்கு இலங்கையில் எமக்கு இருக்கின்ற ஜனாநாயகத்தை மேலும் வலுப்படுத்துவதும் மேம்படுத்துவதும் இன்றியமையாதது ஒன்று என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆணைக்குழு குறிப்பாக 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மிகவும் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் செய்த முறைப்பாடுகளுக்கு ஆணைக்குழு செவிசாய்த்து, அந்த ஆர்ப்பாட்டங்களின் போது நிகழ்ந்த மினத உரிமை மீறல்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தியுள்ளது. இந்த நிலைமைகளில், சட்ட நிவாரணங்களை வழங்குவதற்கு மேலதிகமாக, ஆணைக்குழு அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கான உரிமையை பாதுகாப்பதற்கும், அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எதிர்காலத்தில் அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது மீறப்படுவதை தடுப்பதற்கும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க கடமைப்பட்டுள்ளது. ஆகையால், பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதலும் மற்றும் அதனுடன் சம்பந்தமான அரசாங்கத்திற்குரிய கடமைகளும் பற்றி சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களை தொகுத்து வழங்குவதில் நான் பெருமை அடைகின்றேன். சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்களை ஏற்று பின்பற்றுமாறு இமஉஆ உரிய சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளை வலியுறுத்துகின்றது. இந்த சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்கள் தேசிய சட்டத்தினதும் மற்றும் அரசு பொறுப்புக்கூற வேண்டிய இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சம்பந்தமான கடப்பாடுகளினதும் அடிப்படையில் அமைந்துள்ளன. மேலும், சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதால், ஏற்கனவேயிருக்கின்ற சட்டத்தை அமுலாக்குதலும் மற்றும் பிரயோகமும் அடங்கலாக, மேற்குறித்த குறிக்கோள்களை முழுமையாக அடைவதற்கு துணையாக அமையும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

இந்த சந்தர்ப்பத்திலே என்னுடன் பணியாற்றும் சக ஆணையாளர்களான செல்வி. அநுசூயா சண்முகநாதன், வண. கழுபஹன பியரத்தன தேரர், கலாநிதி. விஜித நாணயக்கார, டாக்டர். நிமல் கருணாசிரி என்போருக்கு அவர்களின் ஈடிணையற்ற ஆதரவிற்கு நன்றி கூறுகின்றேன். அத்துடன் ஆணைக்குழுவின் செயலாளரான திரு.ரஞ்சித் உயாங்கொட விற்கும், மேலதிக செயலாளரான திருமதி. ஹேமா தர்மவர்தன விற்கும், அல்லும் பகலுமாக இப்பணியை ஆற்றிய இவ் ஆணைக்குழுவின் எனது ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

..............................................................

நீதிபதி ரோஹினி மாறசிங்க
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## உள்ளடக்கம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரின் செய்தி

உள்ளடக்கம்


**A.** சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களின் குறிக்கோள்கள் ....... M

**B.** சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களின் நோக்கெல்லை ....... H

**C.** அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை ....... O

**I.** இந்த சட்டம் அமைதியான ஒன்றுகூடுதல்களை மட்டும் பாதுகாக்கும் ....... o

**II.** சகல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அமைதியானவையாக அனுமானிக்கப்படுதல் ....... p

**D.** அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமைகள் மீது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் மூலமான கட்டுப்பாடுகள் ....... C

பாகம் **I:** அரசினது கடைமைகள் ....... T

**I.** பொதுவான கடமைகள் ....... T

**II.** அடிப்படை உரிமைகளுக்கான கடமைகளிலிருந்து விலகி செயல்படுதல் ....... MM

**III.** மட்டுப்பாடுகளுக்கான ஆதாரங்களை எண்பிக்கும் பொறுப்பு ....... MH

**IV.** ஒன்றுகூடும் உரிமையை மட்டுப்படுத்துவதற்கான காரணங்கள் ....... MO

**V.** மட்டுப்பாடுகளின் வகைகள் ....... MП

**VI.** பலத்தைப் பிரயோகித்தல் ....... MT

**VII.** எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னர் விடுக்கப்படும் அறிவித்தல்கள் ....... MУ

**VIII.** இலகுவில் பாதிப்பிற்குள்ளாக கூடிய நபர்களை மற்றும் விஷேட தேவையுடையோரை கையாளும் முறைகள் ....... НЛ

பாகம் **II:** பொது மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளும் போது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்கள் НЛ

**I.** சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்களால் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துதல் ....... НЛ

**II.** சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளின் கடமைகள் ....... Нр

**III.** கட்டளையின் படிநிலை ....... Нр

**IV.** ஆயத்தமும் மற்றும் தந்திரோபாய தெரிவுகளும் ....... 35

**V.** எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது விஷேட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைக் கையாளுதல் ....... 41

**VI.** அரசாங்கத்திற்கு சொந்தமான பொது சொத்துக்களுக்கு அல்லது தனியார் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்படும் குற்றவியல் சேதத்தையும் மற்றும் அவற்றின் மீது மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான ஆக்கிரமிப்புகளையும் கையாளுதல் ....... 47

**VII.** ஊரடங்கு உத்தரவு அல்லது அவசரகால சட்டங்கள் அமுலில் இருக்கும் போது நடத்தப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை சமாளித்தல் ....... 49

பாகம் **III:** அமுலாக்கல் ....... 50

பின்னிணைப்புகள் ....... 52

**"சட்டமுறையான எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்துவதற்கு இருக்கின்ற உரிமையை இன்று மறுத்துரைப்பதானது வேறொரு நாளில் வன்முறை வெடித்து அழிவுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது போகலாம்."**

**"அந்த எதிர்ப்பை வெறுமனே சகித்துக்கொள்ள வேண்டும் என ஜனநாயகம் வற்புறுத்துவதில்லை. மாறாக, அது ஊக்குவிக்கப்படுதல் வேண்டும் என்பதை ஜனநாயகம் வலியுறுத்துகின்றது. நிறைவேற்றுத் துறையின் அந்தக் கடப்பாடு உறுப்புரை 4 (ஈ) இல் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆகையால், பொலிஸாரும் அந்த எதிர்ப்புக்கான உரிமையை மதித்து, பாதுகாத்து முன்னேற்ற வேண்டும்."**
**(அமரதுங்க எதிர் சிறிமல் மற்றும் ஏனையவர்கள் (ஜன கோஷா வழக்கு) [1993] 1 இலங்கை சட்ட அறிக்கை (ச.அ.), நீதிபதி மார்க் பெர்னாந்து, உயர் நீதிமன்றம், இலங்கை)**

## I. சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களின் குறிக்கோள்கள்

1. அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையை தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கு கருதி, ஒரு ஜனநாயக சமூகத்தில், சட்டத்தால் அவசியம் என குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சட்டமுறையான மட்டுப்பாடுகளுக்கு மட்டும் அமைவாக அங்கீகரித்தல் **[இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (ஆ) மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் (ICCPR) இன் உறுப்புரை 21]**

2 சட்டவாட்சியை மேம்படுத்துவதற்கும் மற்றும் அதனை பாதுகாப்பதற்கும் அதேபோல் அனைவருக்கும் உரிய மனித உரிமைகளுக்கும் மற்றும் அடிப்படை சுதந்திரங்களுக்கும் உத்தரவாதமளிப்பதற்கும் அரசாங்கத்திற்கு இருக்கின்ற கடப்பாடுகளை அங்கீகரித்து மதித்தல்.

3 அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையை ஒவ்வொருவரும் பாரபட்சம் அல்லது அச்சம் இன்றி அனுபவிப்பதை அங்கீகரித்தல்.

4 அமைதியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற மக்களை சமாளிக்கும் போது, சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் தேசிய சட்டத்திற்கும் மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கும் இணங்க நடந்துகொள்வதை உறுதிசெய்தல்.

5 அரசியலமைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளை மேம்படுத்துவதற்கும் அவதானிப்பதற்குமான பொறுப்பு அடங்கலாக, மற்றையவர்கள் மீது தனிநபர்களுக்கு இருக்கின்ற கடமைகளையும் மற்றும் பொறுப்புக்களையும் அங்கீகரித்து மதித்தல்.

## II. சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களின் நோக்கெல்லை

1. சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்கள் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பாக இலங்கையின் அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீளவலியுறுத்துகின்றது.

2. சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்கள், பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற போது அங்கு நிகழக்கூடிய வன்முறைகளை அடையாளப்படுத்தி அத்தகைய வன்முறைகளை தடுப்பதற்கும் மற்றும் பொதுவாக அரசாங்கத்திற்கும் அதேபோல் குறிப்பாக சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கும் இருக்கின்ற பொறுப்புக்கூறும் தன்மையை உறுதிசெய்வதற்கு எதிர்பார்க்கின்றன.

3. சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்களில் உள்ளடங்கும் அடிப்படைக் கட்டமைப்பு பின்வருமாறு:

3.1 எந்தவொரு சூழ்நிலையிலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் துன்புறுத்தலுக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைக்கு அல்லது தண்டனைக்கு ஆளாக்கப்படுதல் கூடாது என்பதை (**அரசியலமைப்பின் உறுப்புரை 11)** உறுதிசெய்தல்.

3.2 ஆர்ப்பாட்டக்காரர்கள் தன்னிச்சையாக கைதுசெய்யப்படாமலும், தடுத்துவைக்க -ப்படாமலும், தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரத்தை **(அரசியலமைப்பின் உறுப்புரைகள் 13 (1), 13(2), 13 (3), 13(4), 13(5), 13(6)** உறுதிசெய்தல். 13 (5) மற்றும்13 (6) ஆம் உறுப்புரைகளில் உறுதிசெய்யப்பட்டுள்ள உரிமைகளை தேசிய பாதுகாப்பு நலன் கருதி சட்டத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கு மட்டும் அமைவாக பிரயோகிக்க முடியும்.

3.3 அனைவரும் சட்டத்தின் முன்னிலையில் சமமானவர்கள் என்பதையும் மற்றும் எந்தவித பாரபட்சமும் இன்றி சமமாக சட்டத்தால் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்தல். இது தொடர்பில், சட்டம் ஏதாவது பாரபட்சத்தை தடுத்து அனைவரும் சமமானவர்கள் எனக் கருதி இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் ஆகியவற்றின் அல்லது அத்தகைய ஏதாவது ஒரு காரணங்களின் அடிப்படையில் பாரபட்சத்திற்கு எதிராக அனைவரையும் பாதுகாக்க **(அரசியலமைப்பின் உறுப்புரை 12)** வேண்டும்.

3.4 ஒவ்வொரு பிரஜைக்கும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் உண்டு என்பதை உறுதிசெய்தல். அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் **(அரசியலமைப்பின் உறுப்புரை 14(1) (அ) (ஆ)** இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4 தேசிய பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, பொதுமக்களின் சுகாதாரம், இன மற்றும் சமய ஒற்றுமையை பாதுகாத்தல் அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும் மற்றும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் என சட்டத்தால் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் **(அரசியலமைப்பின் உறுப்புரை 15(3) மற்றும் (15 (7)**) தவிர, மேற்குறித்த உரிமைகளின் பிரயோகத்திற்கு எந்தவித மட்டுப்பாடுகளும் விதிக்கப்படுதல் கூடாது என்பதை சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்கள் உறுதிசெய்யும்.

## III. அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை

### 1. இந்த சட்டம் அமைதியான ஒன்றுகூடுதல்களை மட்டும் பாதுகாக்கும்

1.1. எதிப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு மனித உரிமையாகும். அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்திற்கான உரிமை, அமைதியாக ஒன்றுகூடும் மற்றும் ஒருங்கிணையும் சுதந்திரம், பொது விவகாரங்களில் பங்கெடுத்தல், சிந்திக்கும் சுதந்திரத்திற்கான உரிமை, மனட்சாட்சியையும் மற்றும் சமயத்தையும் பின்பற்றுவதற்கான சுதந்திரம், கலாச்சார வாழ்வில் பங்கெடுப்பதற்கான உரிமை, உயிர்வாழுவதற்கான உரிமை, ஒருவரின் அந்தரங்கம், தனி சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் பாரபட்சத்திற்கு ஆளாக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை என்பன இதில் உள்ளடங்குகின்றன. எதிர்ப்பை தெரிவிப்பதற்கான உரிமையானது பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் அடங்கலாக சகல மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கும் அத்தியாவசியமாகும்.

1.2. அமைதியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை சில சந்தர்ப்பங்களில் மட்டுப்படுத்தப்படலாம் என்பதை சர்வதேச சட்டம் அங்கீகரிக்கின்றது. ஒரு சட்டமுறையான நோக்கத்தில் அத்தகைய உரிமையை மட்டுப்படுத்துவது அவசியமும் பொருத்தமும் என்பதை நியாயப்படுத்தும் பொறுப்பு அதிகாரிகளை சார்ந்ததாகும். தேசிய பாதுகாப்பு (நாடு நிலைத்திருப்பதை பாதுகாப்பதற்கு அல்லது அதன் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கான எதிர்ப்பிலிருந்து அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிரான நம்பத்தகுந்த ஒரு அச்சுறுத்தலிலிருந்து அல்லது உள்ளக அல்லது வெளிக்கள மூலத்திலிருந்து வருகின்ற பலப்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பதற்கு மட்டும் நாடலாம் என்ற), பொது ஒழுங்கு, பொது சுகாதாரம், பொது ஒழுக்கநெறிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு (ICCPR) போன்ற ஒரு சட்டமுறையான நோக்கத்திற்காக சட்டத்தால் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் தவிர, கருத்துத் தெரிவிப்பதற்கான, ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கு அல்லது ஒருங்கிணைவதற்கான சுதந்திரத்திற்கு இருக்கின்ற உரிமை மீது எந்தவிதமான மட்டுப்பாடுகளும் விதிக்கப்படுதல் கூடாது.

1.3. அமைதியான முறையில் எதிர்ப்பை தெரிவிப்பதற்கான உரிமை வன்முறையை பிரயோகிப்பதன் மூலம் அனுபவிக்க முடியாது. அரசியலமைப்பினது உறுப்புரை 14 இன் பின்னணியிலான வன்முறை என்பது அந்த அமைதியான ஒன்றுகூடுகையில் பங்குபற்றுகின்ற நபர்களினால் அநேகமாக ஏனையவர்களுக்கு உடற்காயத்தை அல்லது மரணத்தை அல்லது சொத்துக்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய உடல்ரீதியாக பிரயோகிக்கப்படும் பலம் எனப் பொருள்படும். **வெறுமனே தள்ளியும் இழுத்தும் விடுதல், ஆபாசமான சைககள், அல்லது வாகனங்களின் அல்லது பாதசாரிகளின் நகர்வுக்கு அல்லது நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தல் என்பன வன்முறையாகாது [அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை (வாசகம் 21) பற்றிய பொதுவான கூற்று இலக்கம் 37 (2020)].**

1.4. ஒரு வகுதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றைய வகுதி ஆர்ப்பாட்டக்காரர்களை எதிர்க்கின்ற போது எதிர்-ஆர்ப்பாட்டங்கள் நிகழலாம். இரு வகுதி ஆர்ப்பாட்டக்காரர்களும்

அரசியலமைப்பின் உறுப்புரை 14 இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பாதுகாப்புக்கு உரித்துடையவர்களாவர்.

1.5. எதிர்ப்பு ஆர்ப்பார்ட்டம் அமைதியானதா என்பது அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளும் ஆர்ப்பாட்டக்காரர்களிலிருந்து உருவாகும் ஏதாவதொரு வன்முறைக்கான குறிப்பினால் உறுதிப்படுத்தப்படும். சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளினால் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நோக்கி தூண்டப்படும் அல்லது ஏற்படுத்தப்படும் வன்முறையால் அல்லது ஆத்திரமூட்டல்களால் அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியற்றதாக கருதப்படமாட்டாது. இதேபோல், பொதுமக்களினால் அல்லது பிற எதிர் தரப்பு ஆர்ப்பாட்டக்காரரினால் ஏற்படுத்தப்படும் எந்தவொரு வன்முறையாலும் அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியற்றதாக கருதப்படமாட்டாது.

1.6. தனிமைப்பட்டு ஆங்காங்கே புரியப்படும் வன்முறை அல்லது பிற நபர்களினால் செய்யப்படும் பிற சட்டவிரோத செயல்கள், அவர்கள் தமது நோக்கங்களிலும் நடத்தையிலும் அமைதியாக இருக்கும் வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சட்டவிரோதமாக்குவதில்லை.

1.7. எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆரம்பக் குழு அவர்களின் நோக்கங்களில் அல்லது நடத்தையில் அமைதியாக இருந்தால், ஆரம்பக் குழுவில் உறுப்பினர்களாக இல்லாத வன்முறை நோக்கங்களைக் கொண்ட வெளியாட்கள் இணைந்தாலும், ஆரம்பக் குழுவின் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட உரிமைகளைப் பறிக்க முடியாது.

1.8. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினுள் வன்முறை வெளிப்படையாக பரவலாக இருந்தால் (தனிப்படுத்தப்படாத), அத்தகைய பங்கேற்புக்கு அரசியலமைப்பினது உறுப்புரை 14இன் கீழ் ஒருபோதும் பாதுகாப்பு கிடையாது.

1.9. பங்கேற்பவர்கள் வாயு முகமூடிகள் அல்லது தலைக்கவசங்கள் போன்ற பொருட்களை எடுத்துச் செல்வதை விரோதமாக கருதக்கூடாது. ஆயுதங்களை வைத்திருப்பது தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் அல்லது வன்முறை நோக்கத்திற்கான நியாயமான சான்றுகள் உள்ளதா மற்றும் அத்தகைய ஆயுதங்களால் ஏற்படுத்தப்படும் வன்முறையின் அபாயத்தைப் பொறுத்து ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையில், அது பற்றி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

1.10. நிகழ்வுக்கு முன்னர் அல்லது அதன்போது, அந்த பங்கேற்பாளர்கள் மற்றவர்களை வன்முறைக்காக தூண்டுகின்றார்கள், அத்தகைய செயல்கள் வன்முறையை ஏற்படுத்தக்கூடும், அல்லது கலந்துகொள்பவர்கள் வன்முறை நோக்கங்களைக் கொண்டிருந்தனர் மற்றும் உடனடியாக தம் மீது வன்முறையை பிரயோகிக்க திட்டமிட்டிருந்தனர் என்பதற்கான **நம்பகமான ஆதாரங்களை** (நம்பகமான சான்றுகள்) அதிகாரிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

1.11. அரசியலமைப்பின் உறுப்புரை 14(1) (ஆ) அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமையை மட்டுமே பாதுகாக்கின்றது. வன்முறை நோக்கங்களை உடைய பங்கேற்பாளர்கள் பங்கேற்கும் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு இது பாதுகாப்பளிக்காது.

வேண்டுமென்றே பொலிஸாரின் பாதுகாப்புத் தடைகளை உடைத்துக்கொண்டு செல்வது 14(1)(ஆ) உறுப்புரையினால் பாதுகாக்கப்பட்டுள்ள அமைதியாக ஒன்றுகூடுதல் என்ற கருத்துக்கு புறம்பானதாகும்.

1.12. எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரயோகிக்கும் சில வார்த்தைகள் அல்லது செய்திகள், பங்கேற்பாளர்கள் அல்லாதவர்களிடமிருந்து வலுவான எதிர்வினையைத் தூண்டலாம். அதனால் ஒரு கூட்டத்தை அமைதியற்ற கூட்டம் என கருத முடியாது.

## 2. சகல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அமைதியானவையாக அனுமானிக்கப்படுதல்

2.1 வன்முறையைப் பிரயோகிப்பதற்கான அல்லது தூண்டுவதற்கான நோக்கம் தொடர்பாக உறுதியான ஆதாரங்கள் இல்லாவிட்டால், ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளும் அமைப்பாளர்களினதும் பங்கேற்பவர்களினதும் அமைதியான நோக்கம் மதிக்கப்படுதல் வேண்டும்.

2.2 எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியானதாக இருந்தால், தேசிய சட்டம் மீறப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் கூட, பொலிஸார் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2.3 சட்டவிரோத நடத்தையை நிறுத்துவதற்கான சட்டபூர்வ உத்தரவை எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்க மறுக்கும் சந்தர்ப்பங்களில், அத்தகைய ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்ல நியாயமான காரணங்கள் இருக்கலாம் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதற்கும் அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்கும் நிர்ப்பந்திக்கின்ற காரணங்கள் இருக்க வேண்டும்.

2.4 சாத்தியமான போதெல்லாம், ஒன்றுகூடுவதற்கு முன்னதாக அல்லது ஒன்றுகூடும் போது நடந்த சட்டவிரோத செயல்களுக்காக, நிகழ்வு முடிவுக்கு வரும் வரை, கூட்டத்தில் பங்கேற்பவர்கள் கைதுசெய்யப்படுவதை தாமதப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

2.5 சட்டவிரோத செயல்களில் நேரடியாக ஈடுபடும் நபர்கள் மட்டுமே கைது செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய நபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கான காரணங்கள் இல்லாத நிலையில் விரைவில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

2.6 குறுகிய காலத்திற்கு தடுப்பு காவலில் வைப்பது கூட பங்கேற்பவர்களின் ஒன்றுகூடும் உரிமையையும் அவர்களின் நடமாடும் சுதந்திரத்தையும் நேரடியாகப் பாதிக்கும் என்பது மட்டுமல்லாமல் அரசியலமைப்பின் 14(1) (ஏ) உறுப்புரையின் கீழ் உறுதிசெய்யப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரத்தையும் மறைமுகமாக பறிப்பதாகவும் இருக்கலாம்.

## IV. அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமைகள் மீது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் மூலமான கட்டுப்பாடுகள்

1. விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே ஒரு கூட்டத்தை **கலைக்கலாம்**. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இனியும் அமைதியானதாக இல்லாவிட்டால் அல்லது இலக்கு வைக்கப்பட்ட கைதுகள் போன்ற மிக நியாயமான நடவடிக்கைகளால் நியாயமான முறையில் அடையாளப்படுத்த முடியாத ஒரு உடனடி தீவிர வன்முறை அச்சுறுத்தலுக்கான தெளிவான சான்றுகள் இருந்தால், கலைக்கப்படலாம். கலைக்கப்படுவதற்கான காரணங்களும் நிபந்தனைகளும், அரசியல் அமைப்பு சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு அமைவாக பொலிஸ் உத்தரவுகளிலும் கையேடுகளிலும் விவரித்துக்காட்டப்படுதல் வேண்டும்.

1. முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு அதிகாரி மட்டுமே அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு உத்தரவிடலாம். அவசியம் மற்றும் நியாயம் என்ற கோட்பாடுகளினால் வழிகாட்டப்படும் கடைசி முயற்சியாக கலைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். உடனடி வன்முறை அச்சுறுத்தல், எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையை விடவும் அதிகளவு அழுத்தத்தை கொண்டிருந்தால் மட்டுமே தகுதிவாய்ந்த ஒரு அதிகாரியால் அதற்கு எதிரான உத்தரவு பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. முன்கூட்டிய அறிவித்தல் தேவைகளுக்கு இணங்காததன் அல்லது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மீதான ஏனைய சட்டபூர்வ முன்கூட்டிய கட்டுப்பாடுகளுக்கு இணங்கத் தவறியதன் காரணமாக கலைப்புக்கான உத்தரவு பிறப்பிக்கப்படுதல் கூடாது.

3. கூடுமான செயல்முறை சாத்தியத்தில், சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கான ஏதேனும் உத்தரவுகளை அறிவித்து, அவை பற்றி விளக்க வேண்டும். வற்புறுத்தும் வழிமுறைகளுக்கு வழிவகை செய்யும் முன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்ல போதிய அவகாசம் வழங்கப்படுதல் வேண்டும்.

4. பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும், அதாவது பொது வீதிகளை மறித்து, அமைதியான முறையில் நடைபெறும் ஒரு கூட்டம், அத்தகைய இடையூறுகள் கடுமையாகவும் தொடர்ச்சியாகவும் இருந்தால் மட்டுமே கலைக்கப்படுதல் வேண்டும்.

5. உள்நாட்டு சட்டத்திற்கு இணங்க கலைக்க ஒரு உத்தரவு பெறப்பட்டால், தேவையான பலத்தை பிரயோகிக்கலாம். முடிந்தவரை வன்முறையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக மட்டுமே தேவையான பலத்தை பிரயோகிக்க பொலிஸார் முயற்சிக்க வேண்டும். ஒரு கூட்டத்தை கலைக்க துப்பாக்கிகளை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. உடனடி மரண அச்சுறுத்தலை அல்லது கடுமையான உடற்காயத்தை தடுப்பதற்கு துப்பாக்கிகளை கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும் என்றால் மட்டுமே, சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் இலக்கு வைக்கப்பட்ட நபர்களுக்கு எதிராக துப்பாக்கிகளை பயன்படுத்தலாம். பலத்தை பிரயோகிப்பவர்கள், அத்தகைய பலத்தை பிரயோகிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

6. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் பலத்தை அல்லது **பலாத்காரத்தை** பிரயோகிப்பதற்கு முடிவு செய்திருந்தால், காயப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க

போதியளவு மருத்துவ வசதிகள் இருப்பதை அத்தகைய அதிகாரிகள் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

7. ஒரு கூட்டத்தை கட்டுப்படுத்தும் போது கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடுகளை நடத்துதல் மற்றும் முற்றிலும் தானியங்கி துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல் சட்டவிரோதமானதாகும்.

**பாகம் I: அரசினது கடைமைகள்**

**"தனிநபர்கள் பொலிஸாரின் நடவடிக்கையை வாய்மொழியாக எதிர்க்கும் அல்லது சவாலுக்கு உட்படுத்தும் சுதந்திரம், அதன்மூலம் கைது செய்யும் ஆபத்து இல்லாமையானது, ஒரு சுதந்திர தேசத்தை காவல்துறை அரசிலிருந்து வேறுபடுத்துவதற்கான முக்கிய பண்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. அது போலவே, அதிகாரிகள் வாய்மொழி துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ள மாட்டார்கள். மக்கள் பரஸ்பர மரியாதையை ஊக்குவித்து மதிப்பார்கள், அதேபோல் பொலிஸாரும் மக்களை கண்ணியத்துடன் நடத்துவதன் மூலம் மரியாதையை வெளிப்படுத்துவார்கள். ஆனால், குறிப்பாக அதிகாரிகள் அரசியலமைப்பிற்கு முரணாக காவல்துறை நடவடிக்கையில் ஈடுபடும் போது, அத்தகைய அதிகாரிகள் பேச்சை அடக்குவதன் மூலம் வெறுமனே சமூக எதிர்ப்பை தீவிரப்படுத்துகின்றார்கள்.**
**(U.S உயர் நீதிமன்றம், ஹவுஸ்டென் நகரம், ரெக்ஷாஸ் எதிர் ஹில், 482 U.S. 451 (1987))**

**I. பொதுவான கடப்பாடுகள்**

1. அரசாங்கம் அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அடங்கலாக மனித உரிமைகளையும், அடிப்படை சுதந்திரங்களையும் மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் முதன்மை பொறுப்பைக் கொண்டுள்ளது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின்படி அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், ஒருங்கிணைதல், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்திற்கும், உரிமைகளை மக்கள் பிரயோகிக்கும் வகையில் தேசிய கட்டமைப்பை உறுதிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

2. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியாக இருக்கும் வரை, அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் அதிகாரிகள் உடன்பட்டாலும், இல்லாவிட்டாலும், அரசாங்கம் அதற்கு வசதிசெய்ய வேண்டும். அத்தகைய அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது ஏதாவதொன்றை செய்து, அந்த ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு, சர்வதேச மனித உரிமைகள் நியமத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தேவையும் நியாயமும் சார்ந்த கடுமையான சோதனை ஏற்பாடுகளை பூர்த்திசெய்ய வேண்டும்.

3. நீதித்துறையின் அல்லது தேசிய மனித உரிமை நிறுவனங்களின் சட்டநிவாரணங்கள் அடங்கலாக பயனுள்ள சட்டநிவாரணங்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக அணுகுவதை அரசு உறுதிசெய்ய வேண்டும். மேலும், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் ஒரு உரிமை மீறல் உறுதிசெய்யப்பட்டால், உரிய

அதிகாரிகள் அதன் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் பற்றி நியாயமான காலத்திற்குள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும்.

4. அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு மட்டுப்பாடுகளை விதிக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. இருப்பினும், அந்த மட்டுப்பாடுகளை நியாயப்படுத்த வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்குரியதாகும். அத்தகைய மட்டுப்பாடுகள் சட்ட மற்றும் நியாய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதை உரிய அதிகாரிகள் நிரூபிக்க வேண்டும். தனது ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக நம்பத்தகுந்த அச்சுறுத்தல் அல்லது பலப்பிரயோகம் தென்படுமானால், அதனை காரணமாக காட்டி அதற்கு எதிராக அரசு தன்னை பாதுகாக்க, அத்தகைய மட்டுப்பாடுகள் அவசியம் எனும் போது, தேசிய பாதுகாப்பு நலன் கருதி அத்தகைய மட்டுப்பாடுகளை விதிக்கலாம். ஆனால் மனித உரிமைகள் அடக்கியொடுக்கப்படுவதால் சீரழிவு ஏற்படுமிடத்து, மேற்கூறிய காரணங்களை குறிப்பிட்டு அத்தகைய மட்டுப்பாட்டை நியாயப்படுத்த முடியாது. எந்தவொரு மட்டுப்பாடும் சட்டபூர்வ அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டும். அது "சட்டத்தால் குறிப்பீடுசெய்யப்பட்டிருத்தலும் வேண்டும். அதன் உட்பொருள் "ஒரு ஜனநாயக சமூகத்தில் அவசியமானதாக" இருக்க வேண்டும்.

5. அத்தகைய மட்டுப்பாடுகள் அனுமதிக்கப்படுவதற்கு, சர்வதேச சமவாய கடப்பாடுகள் அடங்கலாக சர்வதேச மனித உரிமைகள் பற்றிய விதிமுறைகளுக்கும் நியமங்களுக்கும் அமைவாக இருக்க வேண்டும். அதாவது,

5.1. **சட்டத்தில்** மட்டுப்பாடுகளுக்கான **ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல்** வேண்டும். மட்டுப்பாடுகள், சட்டத்தின் அல்லது சட்டத்தின் அடிப்படையிலான நிருவாக ரீதியான தீர்மானங்களின் மூலம் விதிக்கப்படுதல் வேண்டும். குறித்த ஒரு நடவடிக்கை சட்டத்தை மீறுகின்றதா என்பதை தனிநபர்கள் எதிர்வுகூறி அந்த மீறுகையின் சாத்தியமான விளைவுகளை மதிப்பிடுவதற்கு போதிய குறிப்புடன் இது வகுத்தமைக்கப்படுதல் வேண்டும்.

5.2. **ஒரு நியாயமான சட்டமுறையான நோக்கம்** - ஒரு ஜனநாயக சமூகத்தில் மட்டுப்பாடுகள் அவசியம். விதிக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் ஒரு உண்மையான நோக்கத்தையும், ஒரு சட்டமுறையான நோக்கத்தை பாதுகாக்கும் நிரூபிக்கக்கூடிய விளைவையும் கொண்டுள்ளன என்பதை அரசு நிரூபிக்க வேண்டும். எனவே, தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம் அல்லது ஒழுக்கம், மற்றையவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் அல்லது பொது பாதுகாப்பு ஆகியவற்றுக்காக மட்டுமே மட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். தேசிய, அரசியல் அல்லது அரசாங்க அக்கறையானது, தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது ஒழுங்கிற்கு ஒத்தது அல்ல.

5.3. **சட்டமுறையான நோக்கத்திற்கு அவசியமும் நியாயமானதும்-** மட்டுப்பாட்டிற்கு ஒரு அழுத்தமான சமூகத் தேவை இருந்தால் மட்டுமே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமைக்கான மட்டுப்பாடுகள் அவசியம் என கருதப்படுதல் வேண்டும். மட்டுப்பாட்டை விதிக்கின்ற தரப்பு, எதிர்ப்புக்கும் பாதுகாக்கப்பட்ட நலனுக்கும் இடையே நேரடியான மற்றும் உடனடியான தொடர்பை காண்பிக்க வேண்டும்.

6. அமைதியான முறையில் கூடும் கூட்டத்தின் மீது, தேசிய பாதுகாப்பையும் மற்றும் பொது ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு மட்டுப்பாடுகளை விதிக்கும்போது, அச்சுறுத்தலின் துல்லியமான தன்மையையும் மற்றும் அத்தகைய அச்சுறுத்தலால் ஏற்படும் குறித்த அபாயங்களையும் நிரூபிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்குரியதாகும். வெறுமனே நாட்டின் பொதுவான பாதுகாப்பு நிலைமையை குறிப்பிடுவது மட்டும், அத்தகைய மட்டுப்பாடுகளை விதிக்க போதுமானது அல்ல.

7. குறித்த கட்டிடங்கள் மற்றும் வீதிகள் போன்ற சில பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஒன்று கூடுவதை அரசு கட்டுப்படுத்தலாம் என்பது அங்கீகரிக்கப்பட்டாலும், அத்தகைய மட்டுப்பாடுகளுக்கான சட்டப்பிரயோகம் சட்டத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். "நேரம், இடம் மற்றும் முறை" ஆகியன மீது மட்டுப்பாடுகளை விதிக்கும் போது, தேவையும் நியாயமும் சார்ந்த முந்தைய கடுமையான சோதனை ஏற்பாடுகளை பூர்த்திசெய்ய வேண்டும். குறிப்பிட்டவொரு நகரத்தில் நடைபெறும் சகல கூட்டங்கள் மீது முழுமையான ஒரு தடையை விதிப்பது பொதுவான ஒரு விதிமுறையாக நியாயப்படுத்த முடியாது.

8. அமைதியான ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு முன்கூட்டிய ஒரு அனுமதி அவசியம் என்பது, அத்தகைய அனுமதி இல்லாதிருந்தாலும், அரசியலமைப்பின் 14 ஆம் உறுப்புரையை மீறுவதற்கு அனுமதி கிடையாது. 14 ஆம் உறுப்புரையின் கீழ் உள்ள உரிமைகளை மக்கள் பிரயோகிப்பதை வசதிசெய்யும் அதேபோல் பொது பாதுகாப்பை உறுதிசெய்து பொது ஒழுங்கையும் மற்றும் மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகளை அனுமதிப்பது, முன்கூட்டிய ஒரு அறிவித்தலை விடுக்க வேண்டும் என்ற நடைமுறைக்கான அடிப்படையாக விளங்குகின்றது.

9. அமைதியான முறையில் கூடும் கூட்டங்களைப் பாதுகாப்பதற்கான அரசின் கடமையானது, அத்தகைய கூட்டங்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் அல்லது கலைக்கும் நோக்கம் உடைய எதிர்-ஆர்ப்பாட்டக்காரர்களும், ஆத்திரமூட்டுபவர்களும் அடங்கலாக பிற தனிநபர்களிடமிருந்து, அத்தகைய கூட்டங்களில் பங்கேற்பவர்களை பாதுகாக்கும் பொறுப்பினையும் உள்ளடக்குகின்றது. அத்தகைய தனிநபர்களில் அரச பொறிமுறையை சேர்ந்தவர்கள் அல்லது அரசின் சார்பாக பணிபுரிபவர்களும் அடங்குவர். ஆர்ப்பாட்டத்திற்கு எதிரான குழுவினர் ICCPR இன் 5 ஆம் வாசகத்தினுள் வரக்கூடும். எனினும் ICCPR இன் 21 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு அவர்களுக்கு ஏற்புடையதாகாது.

10. சர்வதேச நியமங்களுக்கு இணங்கக்கூடிய பலத்தை பிரயோகிக்கும் பொருட்டு குறிப்பாக ஆபத்தை விளைவிக்கவல்ல பலத்தை பிரயோகிக்கும் போது ஒரு உள்நாட்டு சட்டக் கட்டமைப்பை அரசு தயாரிக்க வேண்டும் என்பது சட்டமுறையான கோட்பாட்டிற்கு தேவைப்படுத்துகின்றது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும், ஒழுங்குறுத்தும் நியமங்களையும் முற்றிலும் அனுசரிக்கின்ற உள்நாட்டு சட்டமும் கட்டாயம் அரசிடம் இருக்க வேண்டும். மேலும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் போது அத்தகைய சட்டத்திற்கு இணங்க அவர்கள் செயல்படுவதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும். ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு அல்லது 'முழங்காலுக்குக் கீழே சுடுவதற்கு' பலத்தை அல்லது தேவையான அனைத்து பலத்தையும் பிரயோகிக்கும் வகையில் உள்நாட்டு சட்டம் அதிகாரிகளுக்கு

பெருமளவில் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்கக்கூடாது. குறிப்பாக, உள்நாட்டு சட்டம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற, அதிகப்படியான அல்லது பாரபட்சமான அடிப்படையில் அத்தகைய பலம் பிரயோகிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது.

11. அனைத்து வகையான கைதுகளும், தடுத்துவைத்தல்களும் மற்றும் அடுத்துவரும் ஏதாவது விசாரணைகளும் சட்டத்திற்கும் மற்றும் சட்டத்தால் தாபிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கும் அமைவாக மேற்கொள்ளப்படுவது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். சட்டங்களும் அவற்றின் பிரயோகங்களும் ஒரு சட்டத்தரனியை அணுகுவதற்கான உரிமை அடங்கலாக, பொருத்தமானதாகவும், நியாயமானதாகவும், எதிர்வுகூறக்கூடியதாகவும், சட்டத்தின் சரியான செயல்முறைக்கு அமைவானதாகவும் மற்றும் தன்னிச்சை அற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

12. பெருமளவான கைதுகள் அல்லது தடுத்துவைத்தல்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும். சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள், கோட்பாட்டு ரீதியில், பெருமளவான கைதுகளையும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழமையாக தன்னிச்சை என கருதப்படுபவகைளையும் மற்றும் குற்றமற்றவர் என்ற அனுமானத்திற்கு முரணானவற்றையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

13. ஒளிபரப்பு, அச்சீட்டு ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள், இணையம் மற்றும் பிற தகவல்தொடர்பு தளங்கள் என்பவற்றின் மூலம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பற்றிய தகவல்களை இலவசமாகப் பரப்புவதை கட்டுப்படுத்தும் அல்லது மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை திணிப்பதிலிருந்து அரசு தவிர்ந்துகொள்ள வேண்டும். தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம், பொது ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு முதலிய நலன் கருதி விதிக்கப்படும் எந்தவொரு மட்டுப்பாடும் சட்டத்தால் குறிப்பீடுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

14. மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பொது அவசர நிலைகளில் மட்டுமே சர்வதேச மனித உரிமைகள் வாக்குறுதியை பாராதீனப்படுத்தி புறம்பாக செயல்படுவதற்கு அரசு அனுமதிக்கப்படும். அத்தகைய பாராதீனப்படுத்தல் தேசிய சட்டத்தினதும் சர்வதேச சட்டத்தினதும் எல்லைக்குள் அதிகாரப்பூர்வமாகவும் சட்டபூர்வமாகவும் இடம்பெறல் வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த அரசு அவசர நிலையை பிரகடனப்படுத்தக்கூடாது.

15. அரசியலமைப்பினாலும் பிற உள்நாட்டு சட்டங்களினாலும் கண்டிப்பாக அனுமதிக்கப்பட்டுள்ளதை தவிர, பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு ஆயுதம் தாங்கிய இராணுவ படைகள் அனுப்பப்படுவதை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும். சிவில் அதிகாரிகளினது வேண்டுகோளின் பேரில், விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு ஆயுதப் படைகள் அனுப்பப்படலாம்.

    15.1. ஆயுதப் படைகள் பொலிஸாருக்கு உதவிக்காக மட்டுமே ஈடுபடுத்தப்படலாம். பொலிஸாரின் கட்டளையின் கீழ் செயல்படுவதற்கு இராணும் பணிக்கப்படுதலும் வேண்டும் (1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 95 [3]).

15.2. அவர்கள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும் மற்றும் கட்டுப்படுத்தும் நியமங்களுக்கும் மற்றும் பலப்பிரயோகம் பற்றிய கோட்பாடுகளுக்கும் மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நியமங்களுக்கும் முழுமையாக இயைந்தொழுக வேண்டும்.

15.3. அவர்களின் செயல்பாட்டு நடைமுறைகள் முற்றிலும் ஒரு போர் அணுகுமுறையிலிருந்து (எதிரியை எதிர்த்துப் போராடுதல்) ஒரு சட்டத்தை அமுலாக்கும் அணுகுமுறைக்கு மாற வேண்டும். உபகரணங்களை மாற்றுவதன் மூலம் பலப்பிரயோகத்தை தவிர்த்து சரியான முறையில் உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

16. ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வன்முறையில் முடிவடைந்தால், அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு வசதிசெய்வதற்கும், வன்முறையைத் தடுப்பதற்கும் மற்றும் அநேகமாக வன்முறையில் ஈடுபட்டவர்களுடன் அல்லது வன்முறை நோக்கம் இருந்தவர்களுடன் சிநேகிதமான முறையில் பிணக்கை தீர்ப்பதற்கும் அரசு தவறியதே அதற்கான காரணம் என்பதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

17. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளினால் பிரயோகிக்கப்படும் பலப்பிரயோகம் பற்றிய உள்நாட்டு சட்டவாக்கங்கள் சர்வதேச சட்டத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

18. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையின் மீது அரசுகள் நியாயமற்ற மட்டுப்பாடுகளின் பிரயோகத்தை தவிர்ப்பது மட்டுமல்லாமல், அந்த உரிமையைப் பாதுகாக்கவும் வேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். எவ்வாறாயினும், அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட்டுள்ள உரிமைகளை மக்கள் பிரயோகிக்கும் போது, பொது அதிகாரிகளின் தன்னிச்சையான தலையீட்டிலிருந்து தனிநபரைப் பாதுகாப்பதும் அதேபோல் இந்த உரிமைகள் மக்களால் அனுபவிக்கப்படுவது உறுதிசெய்யப்படுவதை முடியுமான ஒரு கடமையாக நிர்ப்பந்திப்பதும் அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ), (ஆ) ஆகியவற்றின் முக்கிய கருப்பொருளாகும்.

**II. அடிப்படை உரிமைகளுக்கான கடப்**பாடு **களிலிருந்து விலகி செயல்படுதல்**

1. நிலவரங்கள் ஒரு அவசரநிலையை கண்டிப்பாக தேவைப்படுத்தும் ஒரு சூழ்நிலையில் மட்டுமே, அரசியலமைப்பின் 14 ஆம் உறுப்புரையின் கீழ் அரசுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளில் இருந்து அரசு விலகி செயற்படலாம். அவசரநிலைகள் முடிவுக்கு வரும் போது, அவசரகால அதிகாரத்தத்துவங்கள் மீளப்பெறப்படுதல் வேண்டும். குறிப்பாக, நெருக்கடிநிலை அல்லது அவசரநிலை உண்மையானதாக அல்லது உடனே நிகழக்கூடியதாக இருத்தல் வேண்டும். அத்தகைய நிலவரம் ஒட்டுமொத்த மக்களையும் பாதிப்பதாகவும் மற்றும் மக்களின் ஒழுங்கமைந்த வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவும் இருந்தால் மட்டுமே அரசு அவசரநிலையை பிரகனப்படுத்தலாம்.

2. பொதுவாக, அவசரகால அதிகாரத்தத்துவங்கள் ஒரு உடனடி அவசர நெருக்கடிநிலை காணப்படும் போது அதற்கு ஏற்றதாக பிரயோகிக்கப்படுதல் வேண்டும். நியாயமான

கருத்து வேறுபாடுகளையும், எதிர்ப்புகளையும், கருத்து வெளிப்படுத்தலையும் மற்றும் மக்களின் பணிகளையும் கட்டுப்படுத்தும் வகையில் அத்தகைய அதிகாரத்தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் கூடாது. அவசரநிலைமை இருப்பது பற்றி பொதுமக்களுக்கு உணர்த்த வேண்டும்.

3. ஒரு கூட்டத்தை தடை செய்ய அரசுக்கு உரிமை இருந்தாலும், அது கடைசி முயற்சியாக இருக்க வேண்டும். குறைந்தளவான ஒரு கட்டுப்பாட்டு பதிலீட்டு நடவடிக்கை, ஏனைய பொருத்தமான உரிமைகளையும், சுதந்திரங்களையும் மற்றும் பொது ஒழுங்கையும் பாதுகாப்பதில் அதிகாரிகள் எதிர்பார்த்த நோக்கத்தை அடைய முடியாதுள்ளது என்றால் மட்டுமே தடைசெய்வதை கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு கூட்டத்தை கட்டுப்படுத்தும் ஏதாவது ஒரு தடங்கல் அல்லது தடை ஒவ்வொரு விடயத்தினதும் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு கூட்டமும் சட்டமுறையான தன்மை, தேவை மற்றும் நியாயத்தன்மை ஆகிய சோதனைகள் கட்டமைப்பைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

4. ஒரு தடையை நியாயப்படுத்த, அரசு முதலில் கூட்டத்தினை சுமூகமானதாக்க முயற்சிகளை மேற்கொண்டது என்றோ அல்லது கடுமைத்தன்மை குறைந்த தடைகளை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டதோ என்று ஆதாரத்தை காண்பிக்க வேண்டும். உதாரணமாக, அமைதியான ஒரு கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்க போதியளவு வளங்கள் இல்லையென அரசு வாதிடுமானால், அத்தகைய தடையானது அரசு தனது முடியுமான கடமைகளை நிறைவேற்றுவதில் அரசு தவறிவிட்டது என்பதையே குறிக்கலாம்.

**5.** சகல கூட்டங்களின் மீது அரசு **ஒரு கண்மூடித்தனமான முழுமையான தடையை** விதிக்கக் கூடாது. ஒரு சில நேரங்களில் அல்லது கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்ற குறித்த இடங்களில் அல்லது பொது இடங்களில் கூடக்கூடிய சகல கூட்டங்களுக்கும் ஒரு முழுமையான தடையை விதிப்பதானது, ஒன்றுகூடும் சுதந்திரத்திற்கான உரிமையை மீறுகின்ற அதிகளவு கட்டுப்பாடுகளை தோற்றுவிப்பதாக கருதப்படும். முழுமையான தடைகள், எதிர்பார்த்த விழிப்பூட்டப்படும் நபர்களின் பார்வையும் ஒலியும் என்ற வரையறையினுள் கூட்டங்களை நடத்துவதற்கான திறனுக்கு கணிசமான தடையை ஏற்படுத்தலாம்.

6. பயங்கரவாதத்தையும் வன்முறை சார்ந்த தீவிரவாதத்தையும் எதிர்த்துப் போராடும் சூழலில் மட்டுப்பாடுகள் அனுமதிக்கப்படலாம். எவ்வாறாயினும், பயங்கரவாதத்தையும் வன்முறை சார்ந்த தீவிரவாதத்தையும் எதிர்ப்பதற்காக வகுத்தமைக்கப்பட்டுள்ள உள்நாட்டு சட்டம் தேசிய பாதுகாப்புக்கும், மற்றையவர்களின் உரிமைகளுக்கும் மற்றும் பாதுகாப்புக்கும் கண்டிப்பாக அவசியமில்லை என்ற ஒரு நிலையில், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திர உரிமை அடங்கலாக அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் மீது எந்த மட்டுப்பாடுகளையும் விதிக்க கூடாது.

### III. மட்டுப்பாடுகளுக்கான ஆதாரங்களை எண்பிக்கும் பொறுப்பு

1. வெறும் சந்தேகங்கள், அச்சங்கள் அல்லது அனுமானங்கள் கூட்டங்களுக்கு எதிரான முன்கூட்டிய மட்டுப்பாடுகளை விதிக்க போதுமானது அல்ல. ஒரு எதிர்ப்பு ஆட்டத்தின் போது எதிரெதிர் குழுக்களிடையே பதற்றமும் கடுமையான வாக்குவாதங்களும்

ஏற்படுவதற்கான வெறும் சாத்தியம் ஒரு கூட்டத்தை தடைசெய்யும் வகையில் நியாயப்படுத்துவதற்கு போதுமான ஒரு ஆதாரம் அல்ல.

2. எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் வன்முறை நோக்கங்களை நிரூபிக்கும் பொறுப்பு அதிகாரிகளுக்குரியதாகும்.

3. மட்டுப்பாடுகளுக்கான காரணங்களை, கூட்டங்களை ஏற்பாடு செய்யும் தரப்புகளுக்கு எழுத்து வடிவில் முடிந்தவரை விரைவாக அறியப்படுத்த வேண்டும். நிகழ்வுக்கு முன்னதாக, குறித்த தடைகளை ஒரு நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அத்தகைய தரப்புகளை அனுமதிக்கும் நோக்கத்திற்கு அத்தகைய காரணங்கள் முன்கூட்டியே அறியப்படுத்தப்படுதல் வேண்டும்.

## IV. ஒன்றுகூடும் உரிமையை மட்டுப்படுத்துவதற்கான காரணங்கள்

கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் மீது விதிக்கப்படும் மட்டுப்பாடுகளை நியாயப்படுத்தக்கூடிய பல நியாயமான சட்டமுறையான நோக்கங்களை அரசியலமைப்பு பட்டியலிடுகின்றது.

1. **தேசிய பாதுகாப்பு:** வெளி அல்லது உள் மூலங்களிலிருந்து நாடு நிலைத்திருக்கும் தன்மைக்கு அல்லது அதன் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு எதிராக எழுகின்ற அச்சுறுத்தலிருந்து அல்லது பலப்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு மட்டுமே தடைசெய்வது அனுமதிக்கப்படலாம். எவ்வாறாயினும், அரசியல் பேச்சுகளில் அல்லது பொது நலன்களை வெளிப்படுத்துவதில் எந்தவொரு தடையும் இருத்தல் கூடாது. வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் வன்முறையைத் தூண்டுவதற்கு அல்லது பயங்கரவாதக் குற்றச்செயல்கள் புரியப்படுவதை நியாயப்படுத்துவதற்கு வழிவகுப்பதாக இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் ஆள்புல ஒருமைப்பாட்டை பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கை நிலைநாட்டுதல் ஆகிய நோக்கங்களுக்கான 15(7) ஆம் உறுப்புரையின் அடிப்படையில் கூட, பொது மக்களுக்கு அத்தகைய கருத்துக்களை தெரிவிக்கும் உரிமையை அரசு மட்டுப்படுத்தக்கூடாது. சட்டவிரோத ஆயுதக் குழுக்களுக்கு எப்பொழுதும் ஆதரவாக அமையும் வன்முறையான உணர்வுகளும் யோசனைகளும் தூண்டப்படும் வகையில் ஒலிக்கும் பதாகைகள் தேசிய பாதுகாப்புக்கும் ஒழுங்குக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால் அவற்றினால் அத்தகைய தேசிய பாதுகாப்புக்கும் ஒழுங்குக்குக்கும் ஏற்படும் விளைவுகளை தடுக்கும் சட்டமுறையான நோக்கத்தின் நிமித்தம் அதிகாரிகள் அத்தகைய மட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

2. **பொதுமக்கள் பாதுகாப்பு:** மக்களின் உயிருக்கும் உடலுக்கும் நியாயமான நிஜமான ஒரு ஆபத்து அல்லது அவர்களின் சொத்துக்களுக்கு கடுமையான சேதம் ஏற்படும் என்றிருந்தால் மட்டுமே ஒன்றுகூடும் மற்றும் சங்கங்களை அமைக்கும் சுதந்திரத்திற்கான உரிமைகளை மட்டுப்படுத்தலாம்.

3. **பொது ஒழுங்கு:** சமூகத்தின் செயல்பாட்டிற்கு கடுமையான அச்சுறுத்தலாக இருக்கும்போது பொது ஒழுங்கு கருதி மட்டுப்படுத்தலாம். இடையூறு தீவிரமானதாகவும் நீடித்ததாகவும் இருந்தால் தவிர, கடுமையான போக்குவரத்து நெரிசல் போன்ற சிரமத்தை அல்லது இடையூறுகளை ஏற்படுத்தும் அமைதியான போராட்டத்தை கலைக்க கூடாது.

4. **குற்றத்தைத் தடுத்தல்**

5. **5.ஆரோக்கியத்திற்கு விளைவிக்கப்படும் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்பு:** நோய் பரவுதை அல்லது காயம் ஏற்படுவதை தடுத்தல்.

6. **மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தல்:** கூட்டங்கள் மற்றையவர்களின் உரிமைகளை மீறும் நோக்கில் இருத்தல் கூடாது. இது கூட்டத்தில் கலந்துகொள்ளாத மக்களுக்கு ICCPR இன் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை பாதுகாப்பதில் சம்பந்தப்படலாம். இதே நேரம், கூட்டங்களை பொது இடங்களிலும் ஏனைய பிற இடங்களிலும் நடத்துவது சட்டமுறையானதாகும். இத்தகைய கூட்டங்கள் தவிர்க்க முடியாமல் சாதாரண வாழ்க்கையை சீர்குலைக்கக்கூடும் என்றிருந்தாலும், கடுமையான அசௌகரிகங்களை ஏற்படுத்தாத வரையில், அத்தகைய இடையூறுகளுக்கு இடமளிக்கப்படுதல் வேண்டும். இந்த விடயத்தில், அதிகாரிகள் எந்தவொரு தடையை விதித்தாலும் அதற்கு விரிவான நியாயமான காரணங்களை முன்வைக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

   உதாரணமாக, சட்டமா அதிபரின் அலுவலகத்தின் அல்லது நீதிமன்ற வளாகத்தின் முன்பாக ஒழுக்கவீனமான முறையில் பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்பவர்கள், அந்த அலுவலகத்தின் ஊழல் மற்றும் அதன் மீதான அரசியல் ரீதியான கட்டுப்பாடு ஆகியவற்றின் பால் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்தில் அவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்தாலும், அது ஒழுக்கவீனமான செயலாகவும் குற்றச்செயலாகவும் கருதப்படலாம். அத்தகைய செயல் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் அதிகாரிகளின் நியாயமான நோக்கத்தை அடையும் விடயப்பரப்பினுள் வரலாம்.

7. **ஒரு ஜனநாயக மக்கள் சமூகத்தின் பொது நலனுக்கான நியாயமான தேவைப்பாடுகளை /ஒரு ஜனநாயக சமூகத்தின் தேவையை பூர்த்திசெய்தல்:** ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, அரசியல் பன்மைத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு சமூகத்தின் சூழலில் ஏதாவது மட்டுப்பாடுகள் அவசியமாகவும் நியாயமாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய மட்டுப்பாடுகள் வெறுமனே நியாயமானதாக அல்லது பயனுள்ளதாக இருந்தால் மட்டும் போதாது. அத்தகைய மட்டுப்பாடுகள் உரிய பாதுகாப்பு செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளில் மிகக் குறைவான தலையீடாக இருத்தல் வேண்டும். எனவே, சட்டபூர்வமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது அரசியலுக்கு எதிராக எழுப்பப்படும் குரல்கள் வன்முறைக்கான ஒரு அழைப்பாக அல்லது ஒரு எழுச்சியாக, ஏதாவது மட்டுப்பாடுகளை அவசியப்படுத்தும் ஒன்றாக பொருள்கொள்ளப்படுதல் கூடாது.

## V. மட்டுப்பாடுகளின் வகைகள்

ஒரு கூட்டத்தின் மீது விதிக்கப்படும் மட்டுப்பாடுகள், கொள்கையளவில், அதன் நேரம், இடம் மற்றும் முறை ஆகியவற்றுடன் சம்பந்தப்படுவதாக இருக்க வேண்டுமேயொழிய தெரிவிக்கப்படுகின்ற செய்தியுடன் அல்ல.

1. **ஒன்றுகூடும் இடம்**

1.1. பிரதான வீதிகள் அல்லது அத்தியாவசிய வசதிகளுக்கான நிறுவனங்கள் போன்ற பொது இடங்களை ஆக்கிரமிப்பதை கட்டுப்படுத்தலாம் அல்லது தடை செய்யலாம். மேலும் முடிந்தவரை பொருத்தமான மாற்று தளங்களை வழங்கலாம்.

1.2. பின்வரும் பகுதிகள் கட்டுப்படுத்தப்படலாம் அல்லது தடைசெய்யப்படலாம்:

1.2.1. விஷேட தொழில்நுட்ப பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்ட ஆபத்தான உற்பத்தி வசதிகளுக்கு அல்லது பிற வசதிகளுக்கு அருகில்.

1.2.2. மேம்பாலங்களில், ரயில் பாதைகளுக்கு அருகில், எண்ணெய், எரிவாயு, அல்லது பெற்றோலிய குழாய்மார்க்கங்கள் அல்லது உயர் மின்னழுத்த மின்சார மார்க்கங்கள் உள்ள பகுதி.

1.3. பொது நிகழ்வுகள் தடைசெய்யப்படும் இடங்களின் பட்டியல் அந்த வலயங்களின் எல்லைகளை வரையறுக்கும் சட்டத்தால் குறித்துரைக்கப்பட்டு பிரகடனப்படு - த்தப்படலாம்.

1.4. எவ்வாறாயினும், குறித்த நேரங்களில் கூட்டங்கள் மீதான தடைகள் அடங்கலாக முழுமையான தடைகள் ஒவ்வொரு உத்தேச கூட்டத்தின் குறித்த சூழ்நிலையை கருத்தில் கொள்ளாமல் அத்தகைய கூட்டத்தை தடுக்கும் என்பதால், அவை நியாயமற்றதாகும்.

1.5. ஒன்றுகூடும் சுதந்திரத்திற்கான உரிமையின் மைய அடிப்படையில் நோக்குகின்ற போது, அதில் பங்கேற்பவர்கள் தாம் விரும்புகின்ற பார்வையாளர்களுக்கு தமது செய்தியை எங்கு சிறந்த முறையில் தெரிவிக்கலாம் என்பதைத் தேர்ந்தெடுப்பதற்கு அத்தகைய ஒன்றுகூடுதல் ஆதரவாக அமையும். அமைதியான கூட்டங்களுக்குத் தகுந்த மற்றும் பொதுமக்களுக்கு தாராளமாக திறந்திருக்கும் இடங்களை அதிகாரிகள் திட்டவட்டமாக தடுத்து விலக்குவார்களானால், அது நியாயமற்றதாகும். அத்தகைய பொருத்தமான தளங்களை பயன்படுத்துவதை ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகளின் தெளிவில் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். ஒரு செய்தியை வேறொரு இடத்தில் வெளிப்படுத்த முடியும் என்ற உண்மை, அந்த இடம் இலக்குக்கொள்ளப்படும் பார்வையாளர்களின் பார்வைக்கும் ஒலிக்கும் உட்பட்டிருந்தாலும் கூட, வேறொரு இடத்தில் ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு அது போதுமானது அல்ல.

1.6. எவ்வாறாயினும், குறித்த ஒரு விடயத்துடன் தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, ஒரு கூட்டம் கூட்டப்படும் இடத்தை மாற்ற வேண்டும் என்று அதிகாரிகள் நியாயமான முடிவுக்கு வந்தால், பொருத்தமான பிரதியீட்டு இடம் கிடைக்கச்செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய எந்தவொரு பிரதியீட்டு இடமும், கூட்டத்தில் தெரிவிக்க விரும்பும் செய்தி, அது எவரெவருக்கு அனுப்பப்படுகின்றதோ, அவர்களுக்கு சிறந்த முறையில் தெரிவிக்கக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இலக்குக்கொள்ளப்படும்

பார்வையாளர்களின் பார்வையும் ஒலியும் என்ற வரையறைக்குள் கூட்டம் இடம்பெறுதல் வேண்டும்.

1.7. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்யும் தரப்புகள் தமது செய்தியை பயனுள்ள விதத்தில் அறிவிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். எனவே, தேர்ந்தெடுத்த பகுதிக்குள் வசதி செய்யப்படுதல் வேண்டும். உதாரணமாக, தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு அல்லது மற்றையவர்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாத்தல் முதலியவற்றை கருத்திற்கொண்டு, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கட்டுப்படுத்தப்படுவதை நிர்ப்பந்திக்கும் காரணங்கள் இல்லாத வரையில், சிபாரிசு செய்யப்படும் தளம் ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட தளத்திற்கு அருகில் இருந்தாலும், அத்தகைய நிர்ப்பந்திக்கும் காரணங்கள் இன்றி, பொலிஸ் பிரதியீட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தை சிபாரிசு செய்யக்கூடாது. இன்னும் அத்தகைய ஒரு பிரதியீட்டு தளம் தேவைப்படுத்தப்படுமாயின், ஆரம்பத்தில் உத்தேசித்த தளத்திற்கு முடியுமானவரை அருகில் பிரதியீட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்த தளங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

1.8. எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது உரிமைகளை வேறு வழிகளில் அல்லது வேறொரு இடத்தில் திறம்பட பிரயோகிக்கக்கூடுமாக இருந்தால், அவர்களின் உரிமைகள் மீறப்படுதல் அல்லது கட்டுப்படுத்தப்படுதல் கூடாது என்பது ஒரு முக்கியமான கருத்தாகும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்யும் தரப்புகள் ஏற்கனவே முடிவு செய்த இடத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதை மற்றையவர்களின் பாதுகாப்பும் சுதந்திரமும் கருதி பொலிஸார் மறுப்பது ஒரு சட்டவிரோதமான தடையாக இருக்காது.

## 2. போராட்டத்தின் உள்ளடக்கம்

2.1. பேச்சுக்கும் பிற வழிகளிலான கருத்துத் தெரிவித்தலுக்கும் அரசியலமைப்பின் 14(1) (அ) உறுப்புரையின் கீழ் உறுதிசெய்யப்பட்டுள்ள பாதுகாப்பு கிடைக்கும். எனவே, கூட்டங்கள் மீதான ஏதாவது கட்டுப்பாடுகள் தொடர்பு கொள்வதற்கு விரும்பும் செய்தியினது உள்ளடக்கத்தின் அடிப்படையில் இருக்கக்கூடாது.

2.2. அரசாங்கத்தின் கொள்கைகள் அல்லது அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகள் மீதான விமர்சனம் ஒரு அமைதியான கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு போதிய காரணங்களாக ஒருபோதும் இருக்கக்கூடாது. அரசின் அல்லது மக்களின் எந்தப் பிரிவினரையும் புண்படுத்த, அதிர்ச்சியடையச் செய்ய அல்லது தொந்தரவு செய்யக் கூடிய கருத்துக்களை வெளிப்படுத்தும் கூட்டங்களுக்கும் இது ஏற்புடையதாகும். உரைகளிலும் ஆர்ப்பாட்டங்களிலும் பிராந்திய மாற்றங்களைக் கோருவது நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் மற்றும் தேசிய பாதுகாப்புக்கும் தானாகவே அச்சுறுத்தலாக அமையாது.

2.3. சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜனநாயக சமூகத்தில், தற்போதுள்ள ஒழுங்குமுறைக்கு சவால் விடும் மற்றும் அமைதியான வழிகளில் ஊக்குவிக்கப்படும் அரசியல் கருத்துக்களுக்கு, ஒன்றுகூடும் உரிமையினதும் மற்றும்

பிற சட்டபூர்வ வழிமுறைகளினதும் பிரயோகத்தின் மூலம் வெளிப்படுத்துவதற்கான நியாயமான வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

3. **எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சின்னங்களும் மற்றும் பிற பொருட்களும் அடையாளமாக காட்சிப்படுத்தப்படுதல்**

3.1. கொடிகளும், சின்னங்களும் மற்றும் பிற வெளிப்படையான பொருட்களும் காண்பிக்கப்படுவது பாதுகாக்கப்பட்டிருக்கும் தொடர்பாடல் முறையாகும்.

3.2. முத்திரைகள், சீருடைகள், உடைகள், கொடிகள், பதாகைகள் அல்லது பொருள்கள் (மெழுகுவர்த்திகள்) ஒரு அதிர்ச்சிகரமான கடந்த கால வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டாலும் கூட, ஒன்றுகூடும் சுதந்திரத்திற்கான உரிமையில் தலையிடுவதற்கு அதனை ஒரு காரணமாக கொள்ளக்கூடாது. ஆனால் இதுபோன்ற காட்சிப்படுத்தப்படும் பொருட்கள் சட்டத்தால் தடைசெய்யப்பட்டிருந்தால், அதிகாரிகள் முதலில் தடைசெய்யப்பட்ட அந்தப் பொருட்களைப் பறிமுதல் செய்ய முயற்சிக்க வேண்டும். மேலும் கூட்டம் அமைதியாக இருக்கின்றது என்ற அடிப்படையில் கூட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும். ஆனால் இது வன்முறைக்கு வழிவகுக்கும் அல்லது உடல்ரீதியான வன்முறை, இனவெறியின் வெளிப்பாடுகள் அல்லது மத நல்லிணக்கத்திற்கு எதிரான அச்சுறுத்தல் போன்ற செயல்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தால், அத்தகைய வன்முறைகள் முதலியன நிகழ்வதை அல்லது மீண்டும் நிகழ்வதை தடுக்கும் வகையில் கூட்டம் கட்டுப்படுத்தப்படலாம்.

## VI. பலத்தைப் பிரயோகித்தல்

1. விதிவிலக்கான அடிப்படையில் மட்டுமே பலத்தைப் பிரயோகிக்க வேண்டும். இதற்கு முன் பலத்தை பயன்படுத்துவதற்கான நோக்கத்தை தெளிவாக அறிவித்த பபின்னர், கூட்டத்தில் பங்கேற்றவர்கள் அந்தப் பகுதியை விட்டு வெளியேற போதுமான நேர அவகாசம் வழங்கப்படுதல் வேண்டும்.

2. பலப்பிரயோகத்தை நிருவகிக்கின்ற கொள்கைகள்:

2.1. சட்டமுறையற்ற ஒரு கூட்டத்தைக் கலைக்கும்போது, கட்டுப்பாடு, நியாயத்தன்மை, சேதத்தைக் குறைத்தல் மற்றும் உயிரைப் பாதுகாத்தல் போன்ற கொள்கைகளைப் பின்பற்றி தேவையான குறைந்தபட்ச அளவிற்கு மட்டுமே பலத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

2.2. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் ஒரு தெளிவான எச்சரிக்கையை வழங்குவதன் மூலம் இதனை அறிவித்த பின்னரே விதிவிலக்கான அடிப்படையில் பலத்தைப் பிரயோகிக்க வேண்டும். கூட்டத்தில் பிரசன்னமாகி இருக்கின்ற தனிநபர்களுக்கு வழங்கப்படும் ஏதாவது பொலிஸ் உத்தரவுகளை பின்பற்றி வெளியேறுவதற்கு போதுமான நேர அவகாசம் வழங்கப்படுதல் வேண்டும்.

2.3. ஒரு கூட்டத்தை கலைக்கும் போது பலத்தைப் பிரயோகிக்க முன்னர் குறைந்தபட்சம் மூன்று எச்சரிக்கைகள் விடுக்கப்படுதல் வேண்டும் என சிபாரிசு செய்யப்படுகின்றது.

## VII. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னர் விடுக்கப்படும் அறிவித்தல்கள்

1. **அடிப்படைக் காரணம்**

1.1. தனிநபர் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதித்து பாதுகாப்பதற்கும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களும் ஏனையவர்களும் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தமது அரசியலமைப்புத் தேவைகளுக்கு இணங்க அதிகாரிகளுக்கு வாய்ப்பளிப்பதே இந்த அறிவிப்பை விடுக்கும் தேவைக்கான அடிப்படைக் காரணமாகும்.

1.2. விடுக்கப்படும் இந்த அறிவிப்பு அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள எதிர்ப்பு தெரிவிப்பதற்கான ஒரு உரிமை மீறலாகாது. ஆனால் அங்கீகாரம் அல்லது அனுமதி நடைமுறைகள் அவ்வாறிருக்கும்.

1.3. அறிவித்தல் சாதாரண வாழ்க்கைக்கு, போக்குவரத்துக்கு அல்லது பிற பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்படும் இடையூறுகளை குறைப்பதற்கு அதிகாரிகளை அனுமதிப்பதால் அது உதவியாக அமையும். முன்னறிவித்தலானது, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற பிற தேவைகளுக்கு பொலிஸாரை தயார்படுத்தலாம். அறிவித்தல் தேவைப்பாடானது ஒரு நடைமுறை அங்கீகார நடைமுறையாக இருத்தல் கூடாது.

2. **தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகள்**

2.1. 1984 இன் 41 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளவாறான 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளை சட்டத்தின் 77(1) ஆம் பிரிவு, ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு முன்னர் அந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவது பற்றி ஆகக்குறைந்தது ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னராவது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ள இடத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு எழுத்தில் ஒரு அறிவித்தல் விடுக்கப்படுதல் வேண்டும் என குறிப்பிடுகின்றது.

2.2. உதவி போலீஸ் அத்தியட்சர் நிலைக்கு குறையாத பதவி நிலையில் உள்ள ஒரு அதிகாரி, பொது ஒழுங்கை பாதுகாக்கும் அக்கறையில், பொருத்தம் என கருதுவாராயின், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தடைசெய்வதற்கு 1984 இன் 41 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளவாறான 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளை சட்டத்தின் 77(3) ஆம் பிரிவு அதிகாரம் அளிக்கின்றது.

2.3. 1984 இன் 41 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளவாறான 1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளை சட்டத்தின் பிரிவு 77(3) இன் பொருள்கோடல், இலங்கை நீதிமன்றங்களினால் வழங்கப்பட்டுள்ள முன்னைய வழக்கு தீர்ப்பினால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. *சரணபால எதிர் சோலங்க ஆராச்சி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பலர் [1999] 2 ஸ்ரீ எல்.ஆர். 166 என்ற வழக்கில்,* உயர் நீதிமன்றம், 77(3) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பிரயோகிப்பதானது அரசியலமைப்பிற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என கூறியது. அதற்கேற்ப பொது

ஒழுங்கைப் பேண எடுக்கப்படும் நடவடிக்கைகள், கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஒடுக்கப்படுவதுடன் தொடர்பற்றதாக இருத்தல் வேண்டும். மேலும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தை பிரயோகிப்பதற்கு எதிரான தற்செயலான கட்டுப்பாடு, பொது ஒழுங்கை மேம்படுத்துவதற்கு அவசியமானதாக இருத்தல் வேண்டும். அதேபோல், *பெர்னாந்து எதிர் சட்டமா அதிபர் மற்றும் பலர் [983] I ஸ்ரீ எல்.ஆர். 374, குணனார்தன எதிர் பெரேரா மற்றும் பலர் [1983] I ஸ்ரீ எல்.ஆர். 305, அமரதுங்க எதிர் சிறிமல் மற்றும் பலர் (ஜன கோஷா வழக்கு) [1993] 1 ஸ்ரீ எல்.ஆர்., மற்றும் சேனசிங்க எதிர் கருணாதிலக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், நுகேகொட [2003] 1 ஸ்ரீ எல்.ஆர். IT2.* என்ற வழக்குகளில், உயர் நீதிமன்றத்தினால் பல தசாப்தங்களாக இந்த ஏற்பாட்டிற்கு தொடர்ச்சியாக பொருள்கோடப்பட்டிருந்தது. "உறுப்புரை 14(1) (அ) தொடர்பான விதிவிலக்குகள் குறுகியதாகவும் மற்றும் கடுமையானதாகவும் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும். ஏனெனில் பேச்சு சுதந்திரம் ஒரு ஜனநாயக சமுதாயத்தின் அத்தியாவசிய அடித்தளங்களில் ஒன்றாகும், இது நாம் பார்த்தது போல், நிச்சயமற்ற சொற்பதங்களில் அரசியலமைப்பு, இலங்கையாக இருக்க வேண்டும் என குறிப்பிடுகின்றது". (அமரசிங்க நீதிபதி. *சுனிலா அபேசேகர எதிர் ஆரிய ரூபசிங்க, தகவுடைய அதிகாரி மற்றும் பலர்*, எஸ்.சி. மனு இலக்கம்1001 SLR 316).

## 3. அனுமதியை பெறுவதற்கான / மட்டுப்பாடுகளை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகள்

3.1. அனுமதியை பெற வேண்டும் என்ற தேவைப்பாடானது அரசியலமைப்பின் உறுப்புரை 14(1) (ஆ) இன் கீழ் உள்ள உரிமையில் நடைமுறை ரீதியில் தலையிடுவதாகும். எனவே அத்தகைய தேவைப்பாடுகள்:

3.1.1. சட்டத்தால் குறிப்பீடுசெய்யப்பட்டு

3.1.2. சட்டமுறையான ஒரு இலக்கைத் தொடர்வதற்காக

3.1.3. நியாயமானதாக

இருத்தல் வேண்டும்.

3.2. முன் அனுமதி இல்லாமையானது மற்றும் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் 'சட்டவிரோதம்' ஆகியவை அதிகாரிகளுக்கு *carte blanche* ஐ வழங்கமாட்டாது. நியாய விதி இன்னும் அவர்களை கட்டுப்படுத்தும். எனவே, அதிகாரிகள் முதலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அனுமதிக்காதத்திற்கான காரணங்களை எண்பிக்க வேண்டும். ஆபத்திற்கு உள்ளாகும் பொது நலன் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் ஏற்படும் ஆபத்துகள் என்பனவும் குறிப்பிடப்படுதல் வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை ஆர்வம் குன்றச்செய்வதற்கு, அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துவதற்கு அல்லது ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் பிரயோகிக்கும் முறையும் தலையீடுசெய்வதில் உள்ள நியாயத்தன்மையை மதிப்பிடுவதில் ஒரு முக்கிய காரணியாக விளங்கும்.

### VIII. இலகுவில் பாதிப்பிற்குள்ளாக கூடிய நபர்களை மற்றும் விஷேட தேவையுடையோரை கையாளும் முறைகள்

1. பொருத்தமான சகல சர்வதேச மனித உரிமைகள் பற்றிய சமவாயங்களை உள்நாட்டு சட்டத்தினுள் கூட்டிணைப்பதன் ஊடாக அத்தகைய சமவாயங்களை அங்கீகரித்து பயனளிப்பதன் மூலம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை பாதுகாப்பதற்குள்ள அரசின் கடமையை நினைவுகூரும் வகையில், இந்த உரிமைகளை பிரயோகிப்பதில் பாதிக்கப்படக்கூடிய குழுவினரும் விஷேட வகை தனிநபர்களும் எதிர்கொள்ளும் குறித்த சவால்களையும் தேவைகளையும் அரசு மதித்து அடையாளப்படுத்த வேண்டும்.

2. பாதிக்கப்படக்கூடிய நபர்களின் குழுக்களில் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், LGBTQI+ சமூகம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் அடங்குவார்கள். ஊடகவியலாளர்கள், மதகுருமார்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகியோரும் விஷேட வகை நபர்களில் அடங்குவார்கள்.

3. இந்த கடமை, அந்த மக்கள் அவர்களின் ஒன்றுகூடும் சுதந்திரத்திற்கான உரிமையைப் பிரயோகிப்பதற்கு வசதியளிக்கும் நடவடிக்கைகளை எடுக்க தேவைப்படுத்தலாம்.

4. ஒரு கூட்டத்தில் சம்பந்தப்படும் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு எதிரான வன்முறைக்கு அனைத்து வகையான வன்முறைகளையும், சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக வழக்குத்தொடரும் நடவடிக்கைகளையும் சரியான முறையில் ஆராய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பயனுள்ள தீர்வுகளை உறுதிசெய்வதன் மூலமாக அரசு முழுமையான சகிப்புத்தன்மை வாய்ந்த ஒரு அணுகுமுறையை வெளிப்படுத்த வேண்டும்.

5. இந்த வகையான நபர்களுக்கு அவர்களின் ஒன்றுகூடும் உரிமையை பிரயோகிக்கும் போது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளினால் வழங்கப்படும் சிகிச்சை பற்றி சிபாரிசு செய்யப்பட்ட விஷேட வழிகாட்டல்கள் பாகம் II (V) இல் தரப்பட்டுள்ளன.

## பாகம் II: பொது மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளும் போது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்கள்

### I. சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்களால் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துதல்

1. சட்டமுறையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் அமைதியான நடத்தையையும் அனைத்து பிரஜைகளினதும் பாதுகாப்பையும் உறுதிசெய்வது சம்பந்தமாக அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை வன்முறையிலிருந்து பாதுகாப்பது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளின் முடியுமான கட்டாய கடமையாகும். பொலிஸ் பிரிவு தளத்தில் உள்ள ஒரு திட்டத்திற்கு ஏற்ப நிலைகொள்ள வேண்டிய போதியளவு பொலிஸாரை ஈடுபடுத்தி, அவர்களின் கடமைப்பணிகள் பற்றி அவர்களுக்கு நன்கு அறிவிக்க வேண்டும்.

2. நபர்நபர் ஒருவர் மீது கொடிய பலம் பிரயோகிக்கப்படும் போது சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு எதிராக குற்றம் சாட்டப்படலாம்.

3. இலங்கையில், கூட்டத்தை கலைக்கும் கடமைகள் பிரதானமாக இரண்டு வகைப்படும்: அவையானவ பொலிஸாரினால் கூட்டத்தை கலைக்கும் மற்றும் இராணுவத்தினரினால் கூட்டத்தை கலைக்கும் கடமைகளாகும். பொலிஸாரினால் கூட்டத்தை கலைக்கும் கடமைகள் பொலிஸ் கட்டளை சட்டத்திலுமம குற்றவியல் நடைமுறை சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. இராணுவத்தினர் குறைந்தளவான பலப்பிரயோக கொள்கையைப் பின்பற்ற வேண்டும். ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஒரு சட்டமுறையான நோக்கத்திற்கு தேவைப்படுகின்ற போது பொலிஸார் தேவையான பலத்தை மட்டும் பிரயோகிக்க வேண்டும். அத்தகைய பலத்தை பிரயோகிக்கும் போது இந்த வரையறை எப்போதும் பின்பற்றப்படுதல் வேண்டும்.

5. பிரதான வீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களினால் ஏற்படுத்தப்படும் ஒரு வீதித் தடையை அகற்றுவதற்கு பொலிஸார் தலையீடுசெய்தால், அத்தகைய தலையீடானது 1978 அரசியலமைப்பின் 14 (1) (ஏ) உறுப்புரையின் கீழ் உறுதிசெய்யப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடும் உரிமைக்கு வசதியளிப்பதற்கான நியாயமான தலையீடாகும்.

6. பரந்த பகுதிக்கு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் பீரங்கி போன்ற குறைந்தளவு ஆபத்தான ஆயுதங்கள் கண்மூடித்தனமான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகையால் அத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்தும்போது, நெரிசலை அல்லது பார்வையாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது போன்ற அபாயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நியாயமான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

   6.1. தடியடி, தண்ணீர் பீரங்கி மற்றும் கூட்டத்தை கட்டுப்படுத்தும் பிற வன்மையான முறைகளின் பிரயோகம் கண்டிப்பாக ஒழுங்குறுத்தப்படுதலும் மற்றும் எத்தனை கண்ணீர்ப்புகை குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்பது போன்ற பதிவுகள் பேணப்படுதலும் வேண்டும்.

   6.2. கண்ணீர் புகை குண்டுகள் நபர் ஒருவர் மீது நேரடியாக அல்லது அந்த நபருக்கு எதிராக ஒருபோதும் பிரயோகிக்கப்படுதல் கூடாது.

   6.3. கண்ணீர்ப்புகையை அல்லது தண்ணீர் பீரங்கிகளை கூட்டத்தை கலைப்பதற்கு மட்டுமே பிரயோகிக்க வேண்டும். எனினும் அதனால் ஒரு போதும் அடக்கமுடியாது.

   6.4. புவியியல் அல்லது உட்கட்டமைப்பு தடைகள் காரணமாக மக்கள் (பார்வையாளர்கள், பங்கேற்பவர்கள், வன்முறையாளர்கள் மற்றும் அமைதியானவர்கள்) நிகழ்வு இடத்தை விட்டு வெளியேற முடியாத இடங்களில் கண்ணீர்ப்புகையை அல்லது தண்ணீர் பீரங்கிகளை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. வன்முறையில் ஈடுபடும் நபர்களைக் குறிவைப்பது சாத்தியமான அல்லது போதுமான பதிலீட்டு நடவடிக்கையாக இல்லாத அளவுக்கு வன்முறை உக்கிரமடைந்திருந்தால் மட்டுமே அவை பயன்படுத்தப்படுத்தப்படுதல் வேண்டும்.

   6.5. எதிர்ப்பார்ப்பட்டாக்காரர்கள் கலைந்துசெல்ல போதியளவு கால அவகாசத்தை அனுமதித்து வாய்மொழியான ஒரு எச்சரிக்கைக்குப் பின்னரே மேற்குறித்தவற்றை பயன்படுத்த வேண்டும்.

7. தடியடி, கண்ணீர்ப்புகை, பிற இரசாயன பதார்த்தங்கள் மற்றும் தண்ணீர் பீரங்கிகள் ஆகியவற்றினால் ஏற்படும் அதிகளவான தீங்குகளை கருத்தில் கொண்டு, உயர் மட்ட

அதிகார நிலையில் எடுக்கப்படும் ஒரு தீர்மானத்தின் பின்னர் மட்டுமே முறையான பயன்பாட்டிற்கு விரிவான அதிக முன் பயிற்சி பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவற்றை பயன்படுத்த வேண்டும்.

8. ஒரு போராட்டம் வன்முறையாக மாறும் சந்தர்ப்பங்களில் கூட, உயிர் வாழுவதற்கான உரிமை, கைது பேரில் மதிக்க வேண்டிய சுதந்திரம், தடுத்துவைத்தல் மற்றும் துன்புறுத்தல் போன்ற எதிர்ப்பார்ப்பாட்டக்காரர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.

9. அனைத்து பலப்பிரயோகமும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் ஒரு வெளிப்படையான அறிக்கையில் உடனடியாக ஆவணப்படுத்த வேண்டும். ஒரு காயம் ஏற்பட்டால், பலத்தைப்பிரயோகித்ததற்கான காரணங்கள் அடங்கலாக சம்பவத்தின் விவரங்களை குறிப்பீடுசெய்து, பலப்பிரயோகம் அவசியமானதாக மற்றும் நியாயமானதாக இருந்ததா என்பதை எண்பிக்க போதுமான தகவல்கள் அந்த அறிக்கையில் உள்ளடங்கி இருத்தல் வேண்டும்.

10. சட்டத்தை அமுலாக்கும் பிரிவினர் போராட்டத் தளத்தை விட்டு வெளியேறும் எதிர்பார்ப்பாட்டக்காரர்களை பௌதீக ரீதியில் பின்தொடரக்கூடாது.

11. வன்முறையில் ஈடுபடும் ஒரு தனிநபர் பாதுகாப்பாகக் கைது செய்யப்படும் போது, ஏதாவது பலப்பிரயோகத்திற்கான தேவை கடந்துவிட்டால், வேறு எந்த முயற்சியும் அனுமதிக்கப்படாது. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் எதிர்ப்பார்ப்பாட்டத்தை கலைத்தல், குற்றத்தைத் தடுத்தல் அல்லது கைது செய்தல் போன்ற சட்டபூர்வ நோக்கத்திற்கு நியாயமானளவு பலத்தை பிரயோகிக்க வேண்டுமேயொழிய அதிகளவு பலத்தைப் பிரயோகிக்கக்கூடாது. சட்டபூர்வ நோக்கம் நிறைவேறியவுடன், சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் உடனடியாக பலப்பிரயோகத்தை நிறுத்த வேண்டும்.

### II. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளின் கடமைகள்

1. அமைதியான மற்றும் அமைதியற்ற பங்கேற்பாளர்களை வேறுபடுத்துதல். வன்முறையில் ஈடுபடுபவர்கள் மட்டுமே அரசியலமைப்பின் 14 ஆம் உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சட்ட உத்தரவாதத்தை இழக்க நேரிடுவார்கள். புரியப்படும் வன்முறையின் தன்மையின் காரணமாக அத்தகைய வேறுபாடு சாத்தியமற்றது எனில், பொதுவாக பங்கேற்கும் அனைவரையும் தவிர்த்து தனிப்பட்ட ரீதியில் தவறு செய்பவர்கள் இலக்குக்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. எதிர்ப்பாட்டங்களுக்கு வசதியளிப்பதுடன் தொடர்புடைய திட்டமிடல், ஆயத்தம், செயற்படுத்துகை மற்றும் விளக்கமளித்தல் (மாறிவருகின்ற நிலைமைகளை அடையாளப்படுத்தல்) சகல அம்சங்களிலும் மனித உரிமைகள் அடிப்படையிலான ஒரு அணுகுமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். அவையாவன பின்வருமாறு:

   2.1. சம்பந்தப்பட்ட குழுக்களின் அறிவு
   2.2. எதிர்ப்பாட்டத்தை எளிதாக்குவதற்கான ஒரு அர்ப்பணிப்பு
   2.3. எதிர்ப்பாட்டத்தின்போது அனைத்து நிலைகளிலும் தன்னார்வத் தொடர்புகளின் மதிப்பை அங்கீகரித்தல்
   2.4. பங்கேற்பவர்களின் பன்முகத்தன்மையை அடையாளம் காணுதல்.

3. பலப்பிரயோகம் கட்டாயம் அவசியமில்லை என்றிருக்கும் போது, சட்டத்தை அமுலாக்கும் முகவர்நிலையங்கள் ஒருபோதும் பலத்தை பிரயோகிக்கக்கூடாது. கட்டுப்பாடு, நியாயம், சேதத்தைக் குறைத்தல் மற்றும் உயிரைப் பாதுகாத்தல் போன்ற கொள்கைகளைப் பின்பற்றி தேவையான குறைந்தபட்ச அளவிற்கு பலம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஆயுதங்கள், துப்பாக்கிகள் ஆபத்தானது என்பதால் எதிர்ப்பாட்டங்களை கலைப்பதற்கு கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான தந்திரோபாய சாதனங்கள் அல்ல. அவை தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒரு எதிர்ப்பாட்டத்தின் போது பலம் பிரயோகிக்கப்பட்டால், அது தானாக உடனடி மீளாய்வை தூண்டும்.

4. பலத்தை பிரயோகிப்பதால் காயங்கள் அல்லது இறப்புகள் ஏற்பட்டால், ஒரு சுயாதீனமான, திறந்த, உடனடி மற்றும் பயனுள்ள ஒரு விசாரணை, அத்தகைய நோக்கத்திற்காக நியமிக்கப்படும் நேர்மையான மற்றும் திறன் வாய்ந்த ஒரு தனிநபர்கள் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பொறுப்பான அதிகாரிகளுக்கு உரிய முறையில் அங்கீகாரம் வழங்கப்படுதல் வேண்டும். மேலும் சாத்தியமான நிவாரணங்கள் பற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரிவிக்கவும் வேண்டும்.

5. அத்தகைய தலையீடு மற்றைய அதிகாரிகளை அதிக பலப்பிரயோகத்தை தடுத்திருந்தால், தலையிடுவதற்கு தவறியதற்காக சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்யும் நபர்களின் வன்முறை நோக்கங்களை அதிகாரிகள் எண்பிக்க வேண்டும்.

6. அரசாங்கமும் சட்டத்தை அமுலாக்கும் முகவர்நிலையங்களும், தமது கட்டளையின் கீழ் உள்ள சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் சட்டத்திற்குப் புறம்பாக பலத்தை பிரயோகித்திருந்தால் மற்றும் துப்பாக்கிகளை பயன்படுத்தியிருந்தால், அல்லது அவர்கள் அவ்வாறு ஏதாவு செய்திருந்தால், உயர் அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்படுவது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விடயங்களை தடுக்க, ஒடுக்க அல்லது முறைப்பாடு செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

7. ஒரு நபருக்கு மரணத்தை அல்லது கடுமையான காயத்தை விளைவிக்கும் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான உத்தரவு வெளிப்படையாக சட்டவிரோதமானது என்பதை சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் அறிந்திருந்து, அத்தயை ஒரு கட்டளையை பின்பற்ற மறுப்பதற்கு நியாயமான வாய்ப்பு இருந்தால், உயர் அதிகாரிகளின் கட்டளைக்கு கீழ்ப்படிவது ஒரு தற்காப்பாக இருக்காது.

8. மேற்குறித்த சட்டவிரோத உத்தரவை பிறப்பித்த உயர் அதிகாரி மீது முதலாவதாக பொறுப்பு சாட்டப்படுதல் வேண்டும்.

9. முடியுமான வரை அதிகளவான கைதுகளும் தடுத்துவைத்தலும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

10. கூட்டங்களின் போது, சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் தமது சீருடையில் அல்லது தலைக்கவசத்தில் பெயர் அடையாளம் அல்லது இலக்கம் போனற தனிப்பட்ட அடையாளம் தெரியும் வகையில் அணிவது அல்லது காட்சிப்படுத்துவது கடமையாகும். நிகழ்வின் போது அத்தகைய அடையாளத்தை காணக்கூடிய தகவலை அகற்ற அல்லது மறைக்க கூடாது.

11. பொலிஸ் தலையீடுகளின் போது, பொலிஸ் அதிகாரிகள் பொதுவாக அவர்களின் பொலிஸ் பதவிக்கும் தனிப்பட்ட அடையாளத்திற்கும் உரிய சான்றுகளை காண்பிக்கக்கூடிய ஒரு நிலையில் இருத்தல் வேண்டும். பொதுவான ஒரு கண்ணோட்டத்திலிருந்து தனிப்பட்ட பொறுப்புக்கூறும் கருத்து வெற்றுக் கருத்தாக மாறாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

12. வன்முறையில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணுவதற்கு சட்டத்தை அமுலாக்கும் பணியினுள் பொலிஸார் அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

13. பொலிஸாரின் கடமை சார்ந்த தொழிற்பாடுகளை மூன்றாம் தரப்பினருக்கு வழங்கக் கூடாது. கூட்டங்களின் போது வழக்கமாக சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளினால் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்தகைய பணிகளுக்கு பயிற்சி பெறாத ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் (இராணுவ பொலிஸார் அடங்கலாக) உக்கிரமடையும் சாத்தியமான வன்முறையை தவிர்ப்பதற்காக ஈடுபடுத்தப்படுதல் கூடாது. உள்ளகப் பாதுகாப்பு என்பது பொலிஸாரின் ஒரு தொழிற்பாடாகும். மேலும் தேசியப் பாதுகாப்பு என்பது ஆயுதப் படைகளின் ஒரு தொழிற்பாடாகும். ஏனெனில் அவை உருவாக்கப்படும் நோக்கங்கள், அவர்களின் பயிற்சி மற்றும் ஆயத்தம் என்பவற்றை பொறுத்த வரையில் கணிசமான அளவில் இரண்டு வேறு நிறுவனங்களாக கருதப்படுகின்றன. இதனால் மனித உரிமை மீறல் அபாயம் இருக்கும். ஆகையால், உள்ளகப் பாதுகாப்பு விவகாரங்களில் ஆயுதப்படைகளின் தலையீட்டை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

14. கூட்டத்தை ஏற்பாடு செய்யும் நபர்களுக்கு பயனுள்ள தகவல் தொடர்பு மார்க்கங்கள் கிடைப்பதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும். சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் கூட்டங்கள் நடைபெறுவதற்கு முன் போதிய பரப்புரையை செய்ய வேண்டும். ஏற்பாட்டாளர்கள் எவ்வாறு கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர் என்பது பற்றி மேலும் அறிவதற்கு, தெரிந்த கூட்ட ஏற்பாட்டாளர்களை அவர்களுடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ள வேண்டும். இத்தகைய பரப்புரை நடவடிக்கைகள் நம்பிக்கையை நிலைநிறுத்த உதவும். மேலும் பிற்காலத்தில் எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்படாமல் இருப்பதையும் உறுதிசெய்யும்.

15. கூட்டத்திற்கு முன்னரும் பின்னரும் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கு ஒரு நபரை அல்லது குழுவை நியமிக்குமாறு சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது. பொலிஸ் தொடர்பு புள்ளியின் தொடர்புகொள்ளும் தொடர்பு விவரங்கள் பரவலாக விளம்பரப்படுத்தப்படுதல் வேண்டும். அந்த நபர் அல்லது குழு ஒரு தொடர்புப் புள்ளியாக செயற்படுதல் வேண்டும். ஏற்பாட்டாளர்களின் அல்லது எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமைகளை சாத்தியமான முறையில் கடுமையாக பாதிக்கக்கூடிய புலனாய்வு விவரங்களை சேகரித்தல் மற்றும் அவநம்பிக்கையை தூண்டுதல் போன்ற எனைய கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுதல் கூடாது.

16. நிகழ்வின் நேரம், இடம் மற்றும் முறை பற்றி ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்பவர்களுக்கு பரஸ்பர இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய

ஒரு தீர்வுக்கு பயனாக அமையக்கூடிய பரஸ்பர பேச்சுவார்த்தையை உறுதிசெய்வதற்கு இணக்கப்பேச்சுவார்த்தை முயற்சிகள் உதவலாம்.

17. அதிகாரம் அளிக்கப்படாத ஒரு பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்தக் கூடாது என பொலிஸார் விடுக்கும் கட்டளைக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் இணங்க மறுத்தாலும் கூட, அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறை செயற்பாடுகளில் ஈடுபடாத வரையில், பொலிஸ் அதிகாரிகள் பலவந்தமாக தலையீடு செய்வது அமைதியின்மையை தடுப்பதற்கு நியாயமற்றதும் தேவையற்றதுமாகும்.

18. தன்னியல்பான கூட்டங்கள் மற்றும் அறிவிக்கப்படாத கூட்டங்கள் அடங்கலாக, குறுகிய அறிவிப்பில் அல்லது அவசரநிலையில் அல்லது உருவாகும் சூழ்நிலைக்கு பதிலளிக்கும் வகையில் கூடிய கூட்டங்களை எளிதாக்குவதற்கு அதிகாரிகள் நியாயமான மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தேவையான முன்னறிவிப்பு இல்லாததால் மட்டுமே கூட்டங்களைத் தடைசெய்வதற்கான முடிவானது, பங்கேற்பவர்கள் எந்தவிதமான சட்டவிரோதமான நடத்தையில் ஈடுபடாத வரையில், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கு நியாயமற்ற ஒரு தடையாகும்.

## III. கட்டளையின் படிநிலை

1. ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, குறிப்பாக முப்படைகளினதும் மற்றும் பொலிஸாரினதும் தலையீடு தேவைப்படும் சந்தர்ப்பத்தில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் எப்போதும் பாதுகாப்புத் திட்டத்துடன் கண்டிப்பாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என இமஉஆ வலியுறுத்துகின்றது.

2. இது ஒரு விஷேடமான இனங்காணக்கூடிய தொடர் கட்டளைக்கு மிக இன்றியமையாததாகும். சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்களின் தொடர் கட்டளையானது நிறுவனங்களிலுள்ள வித்தியாசமான அதிகாரிகளுக்கு பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கான ஒரு நிலை தொடர்பான கட்டமைப்பாகும். ஆகையால் இது ஒன்றிணைந்து ஒரே நிறுவனமாக தொழிற்படுவதற்கும் சிறந்த ஒருங்கிணைப்பை எளிதாக்குவதற்கும் உதவியாக அமையலாம்.

3. தொடர் கட்டளையை பொலிஸ் மற்றும் முப்படைகள் தொடர்பில் தாபித்து வலுப்படுத்தக்கூடிய பல்வேறு வழிமுறைகள் பின்வருமாறு.

### i. பொலிஸ்

ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கான பாதுகாப்புத் திட்டம் தொடர் கட்டளையையும் கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் தீர்மானிப்பதில் மிக உயர்ந்ததாக இருத்தல் வேண்டும். இது ஒவ்வொரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கும் சூழ்நிலையைப் பொறுத்து தனித்துவமானதாக இருக்கும் (பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு தொடர் கட்டளைக்கான ஒரு உதாரணம் பற்றி 1 ஆம் பின்னிணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது).

## 1. போராட்டத்தின் போது மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைப்பு

1. தணிப்பு நடவடிக்கையானது கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கான அடிப்படைக் கொள்கையாக அமைய வேண்டும். எனவே கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் போது பொலிஸாருக்கும் முப்படைகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை உறுதிசெய்வது அவசியமாகும்.

1.1. கூட்டத்தை கட்டுப்படுத்தும் கடமைப்பணி ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரும் கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் தேவையான பயிற்சியை பெற்றுள்ளதாக திருத்தப்பட்டுள்ளவாறான 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் VIII மற்றும் X அத்தியாயங்களினதும் மற்றும் பொலிஸ் கட்டளை 19அ இன் II ஆம் பாகத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க உறுதிசெய்ய வேண்டும்.

1.2. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலைகளை மறுபரிசீலனை செய்யவும், பதிலளிக்கவும், பயிற்சி பெற்ற சிரேஷ்ட அதிகாரி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தில் கட்டளை அதிகாரியின் பதவிக்கு நியமிக்கப்படுவது உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

1.3. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள், அந்தப் பகுதியின் புவியியல் மற்றும் சனத்தொகை பற்றிய விவரங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். கிடைக்கக்கூடிய ஒவ்வொரு முறையியலும் கட்டளை அதிகாரிகளுக்கும் அவர்களின் கட்டளையின் கீழ் உள்ளவர்களுக்கும் இடையே சுமூகமான முறையில் உடனடியான தகவல் பரிமாற்றத்தை எளிதாக்க வேண்டும்.

1.1. பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் இடையே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பற்றிய தகவல்கள் சுமூகமாகவும் உடனடியாகவும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

1.2. ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு (PSD), பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு (PMSD), மற்றும் அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு (MSD) ஆகியவை அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளைப் பாதுகாப்பதில் ஈடுபடும்போது, இந்தப் பிரிவுகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் பகுதியின் நியாயதிக்கமுடைய பொலிஸாருடன் ஒருங்கிணைந்து தொழிற்படுதல் வேண்டும்.

## 2. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போதும் அதன் பின்னரும் பொறுப்புக்கூறல்

மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அதிகாரியின் பொறுப்புக்கூறல் அத்தகைய பொறுப்புக்கூறலை வலுப்படுத்த முக்கியமானதாகும்;

2.1. .அனைத்து பணியாளர்களும் சீருடையில் இருக்க வேண்டும். ஒவ்வொரு அதிகாரியின் தலைக்கவசத்தின் அல்லது சீருடையின் வெளிப்புறத்தில் அவர்களின்

அடையாளங்கள், பெயர்கள் மற்றும் பிற தனிப்பட்ட மற்றும் முகவர்நிலைய அடையாளங்கள் எப்போதும் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.

2.2. அனைத்து அதிகாரிகளும் தமது குடும்பப்பெயர், அடையாள இலக்கம், பதவிநிலை என்பவற்றை சட்டத்தை அமுலாக்கும் முகவர்நிலையத்தினது கோரிக்கையின் பேரில் வாய்மொழியாக வழங்க வேண்டும்.

2.3. ஒரு அதிகாரி விசாரணை நோக்கங்களுக்காக நியாயமான சந்தேகத்திற்கு உள்ளான ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரரை பதிவு செய்யலாம்.

2.4. திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 95(1) ஆம் பிரிவின்படி, இது தொடர்பான உத்தரவுகளை வழங்குவது, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் பொலிஸ் பரிசோதகர் பதவிக்குக் குறையாத ஒரு உயர் பதவியில் இருக்கும் கட்டளை அதிகாரியின் பொறுப்பாகும். எந்த நேரத்திலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலைகளை கவனமாகக் கருத்தில் கொண்டு, கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

2.5. எந்த நேரத்திலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் உள்ள கட்டளை அதிகாரி இயலாமை காரணமாக கட்டளைகளை வழங்க முடியாவிட்டால் (உதாரணமாக தாக்குதலுக்கு உட்பட்டது), கட்டளைகளை வழங்கும் அதிகாரம் மற்றொரு சிரேஷ்ட கட்டளை அதிகாரிக்கு வழங்கப்படலாம்.

2.6. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் இல்லாத உயர்மட்டக் கட்டளை அதிகாரி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். பணியாளர்களும் உபகரணங்களும் தொடர்பான எந்த வகையான தேவைகளையும் தவறாமல் கண்காணிக்க வேண்டும். மேலும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கவும் வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தனது கட்டளையின் பேரில் கட்டளைகளை வழங்கும் அதிகாரியின் செயற்பாடுகளுக்கும் அவர் பொறுப்புக்கூற வேண்டும்.

2.7. ஒரு கனிஷ்ட அதிகாரி ஒரு கேள்வியை எழுப்ப அல்லது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பான ஏதேனும் புதிய தகவலை சமர்ப்பிக்க விரும்பினால் (உதாரணமாக சிரமங்கள், அதிக பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் தேவை), அவர் அந்தப் பிரச்சினையை ஒழுங்குமுறைப்படி சேவை மூப்பு அடிப்படையில் தமக்கு உயர்ந்த ஒரு பதவி நிலையில் உள்ள அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். தொடர் கட்டளை இடையறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு இது நீண்டகாலம் எடுக்கலாம்.

2.8. தற்போது, பொலிஸ் கட்டளை சட்டத்தின் A19 பிரிவுக்கு இணங்க, கண்காணிப்பு அறிக்கையையும், தகவல் புத்தகத்தையும் மற்றும் அதிகாரியின் அறிக்கையையும் பொலிஸ் பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது தவிர, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உண்மையான நடவடிக்கைகள், அவற்றின் தாக்கம், பணியாளர்களினதும் உபகரணங்களினதும் எண்ணிக்கை, ஏதேனும் குறிப்பிட்ட சம்பவங்கள், பின்விளைவுகள் அடங்கலாக எதிர்காலத்தில் எதிர்ப்பு

ஆர்ப்பாட்டங்களின் போது மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் மேம்படுத்த தேவையான சிபாரிசுகள் அடங்கிய விரிவான மதிப்பீட்டு அறிக்கைகளையும் எழுத்தில் பேணுவது அவசியமாகும்.

2.9. ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை பின்வருமாறு இருக்க வேண்டும் என சிபாரிசு செய்யப்படுகின்றது.

2.9.1. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்திலுள்ள கட்டளை அதிகாரி, ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைதியானதா அல்லது சட்டவிரோதமானதா என்பதைப் பொருட்படுத்தாமல், விதிவிலக்கு இல்லாமல், விரிவான நடவடிக்கைக்குப் பின் அறிக்கையை (AAR) பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

2.9.2. மேலும், துப்பாக்கிச் சூடு நடத்திய எந்தவொரு அதிகாரியும், எந்த காரணத்திற்காகவும், அதன் விளைவைப் பொருட்படுத்தாமல், துப்பாக்கிச் சூடு நடத்தியமை, இலக்கு, துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கான காரணம், துப்பாக்கிச் சூட்டுக்கான கட்டளை முதலியன ஏதேனும் இருந்தால், கட்டளையை பிறப்பித்த அதிகாரியின் அடையாளம் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் இருந்த மிகவும் சிரேஷ்ட அதிகாரியின் அடையாளம் என்பன அடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

2.9.3. அனைத்து எழுத்துப்பூர்வ அறிக்கைகளும் நிகழ்விற்குப் பிறகு தளத்தில் உள்ள கட்டளை அதிகாரியால் முடிந்தவரை விரைவில் தயாரித்து, நிகழ்வு பற்றிய விரிவான ஒரு அறிக்கையை உயர் பதவியிலுள்ள சகல பொலிஸ் அதிகாரிகளும் பெற்று உறுதிசெய்யக்கூடிய வகையில், ஆகக்குறைந்தது பதவி நிலையில் பிரதி பொலிஸ்மா அதிபரின் (பிபொஅ) அல்லது அந்தந்த மாகாணத்திற்கு பொறுப்புடைய சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் ஊடாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

2.9.4. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு அதிகாரி, அறிக்கைக்கும் மற்றும் என்ன நடந்தது என்பதற்கும் அல்லது கடமை மீறலுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையின் நிமித்தம் ஒரு முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும். மேலும் தேவையானவிடத்து சட்டநடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும்.

2.10 அதிகாரிகள் தமது கட்டளை அதிகாரியின் சட்டப்பூர்வ கட்டளையின்றி பதவிநிலையை மீறி இருந்தாலோ அல்லது வேறு எந்த விதமான முறைகேடுகள் இருந்தாலோ அவை சம்பந்தமாக உள்ளக ஒழுக்காற்று விசாரணையின் மூலம் விசாரிக்கப்படுதல் வேண்டும். மேலும் குற்றமிழைத்த அதிகாரி சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுதலும் வேண்டும்.

**ii. விஷேட அதிரடிப்படையின் (STF) வகிபங்கு**

1. நாட்டிற்குள் பயங்கரவாதத்திற்கும் மற்றும் கிளர்ச்சிக்கும் எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதை தடுப்பது பொலிஸ் பிரிவில் STF ஐ நிறுவியதன் நோக்கமாகும். எனவே, முழுக்க முழுக்க பொதுமக்களைக் கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கான நெறிமுறைகள் குறித்து STF க்கு மேலதிக பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். பயங்கரவாதிகளுக்கும் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கும் என குறித்தொதுக்கிய நடவடிக்கைகள் பொதுமக்கள் மீது செயற்படுத்தப்படுதல் கூடாது.

2. STF, பணியமர்த்தப்பட்ட இடத்தில், அவர்கள் அடையாளம் காணக்கூடிய சீருடையில் இருக்க வேண்டும். அவர்களின் அடையாளங்கள், பெயர்கள் மற்றும் பிற தனிப்பட்ட மற்றும் முகவர்நிலைய அடையாளங்கள் எப்போதும் ஒவ்வொரு அதிகாரியின் தலைக்கவசத்தின் அல்லது சீருடையின் வெளிப்புறத்தில் தெரியக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**Iii. முப்படைகள்**

1. பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முப்படைகள் அழைக்கப்படும்போது, திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 95 முதல் 97 வரையிலான பிரிவுகளுக்கு இணங்க அழைக்கப்படுதல் வேண்டும்.

2. முப்படைகளின் உதவியின்றி பொலிஸார் ஒரு சட்டவிரோத கூட்டத்தைக் கலைக்க முடியாத நிலையில், குறித்த சட்டத்தின் 95(3) ஆம் பிரிவின் கீழ், ஒரு நீதிவான், மாவட்ட அரசாங்க அதிபர் அல்லது பொலிஸ் அத்தியட்சகர் பதவிநிலைக்கு (SP) குறையாத ஒரு பதவியில் உள்ள ஏதாவது ஒரு அதிகாரி அத்தகைய கூட்டத்தை கலைப்பதற்கு முப்படைகளை அழைக்கலாம்.

3. திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 96 ஆம் பிரிவின்படி, முப்படைகளில் ஆணையளிக்கப்பட்டுள்ள எந்தவொரு அதிகாரியும், மாவட்ட அரசாங்க அதிபரின், நீதிவானின் அல்லது பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு குறையாத ஒரு பதவிநிலையில் உள்ள எவரேனும் ஒரு பொலிஸ் அதிகாரியின் அறிவித்தல் இன்றி, மேற்குறித்த நபர்களை தொடர்புகொள்ள முடியாது என்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே சட்டவிரோதமான கூட்டத்தை கலைக்கலாம் என்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், முப்படைகளின் ஆணையளிக்கப்பட்டுள்ள எந்தவொரு அதிகாரியும் சட்டவிரோதமான கூட்டத்தைக் கலைத்து, அந்த நோக்கத்திற்காக எந்தவொரு நபரையும் கைது செய்யலாம் அல்லது தடுத்து வைக்கலாம். எவ்வாறாயினும், இந்த நபர்களுடன் தொடர்புகொள்வது செயல்முறை சாத்தியமாகும் போது, முப்படையினர் நீதிவானின், மாவட்ட அரசாங்க அதிபரின் அல்லது பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு குறையாத ஒரு பதவிநிலையில் உள்ள எந்தவொரு பொலிஸ் அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கு இயைந்தொழுக வேண்டும். இந்த வகையில், தகவல் தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்படும்போது, முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ்

அத்தியட்சகர் பதவிக்கு குறையாத ஒரு பதவிநிலையில் உள்ள பொலிஸ் அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும்.

4. முப்படையினரின் பங்கேற்பானது பின்வரும் நிகழ்வுகள் தவிர, பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

4.1. பொது பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி பொது ஒழுங்கை பேணும் பொருட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு ஜனாதிபதியினது தீர்மானத்தின் விளைவாக அவசரகால சட்டம் நடைமுறையில் இருக்கும் போது, (இந்த சந்தர்ப்பத்தில் பொலிஸாருடனான தொடர்பாடலிலும் ஒருங்கிணைப்பிலும் இன்னும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது சிபாரிசு செய்யப்பட்டாலும்)

4.2. ஜனாதிபதி, வர்த்தமானியில் பிரசுரித்த உத்தரவின் மூலம், பொது பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையில், பொது பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் சூழ்நிலைகள் எழுந்துள்ளன அல்லது உடனடியாக தென்படுவதாக அவர் நம்பும் பகுதியில் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு முப்படையினரை அழைக்கலாம்.

5. பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் முப்படைகள் பங்கேற்கும் வேளையில், குறிப்பிட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப தயாரித்த தனித்துவமான பாதுகாப்புத் திட்டத்தின்படி, முப்படைகளுக்கு வலுவான தொடர் கட்டளைகள் விடுக்கப்படுதல் வேண்டும். தொடர் கட்டளையை தீர்மானிப்பதில் பாதுகாப்புத் திட்டமே முதன்மையானது. மேலும் பிரயோகிக்க வேண்டிய கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் (சிவில் அதிகாரிகளுக்கு இராணுவ உதவியின் போது இதுபோன்ற தொடர் கட்டளையின் உதாரணம் பற்றி கீழுள்ள 2 ஆம் பின்னிணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது).

6. இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றினுள் தொடர் கட்டளையை வலுப்படுத்துவதானது; கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் போது பொலிஸாருடனான சிறந்த ஒருங்கிணைப்பை எளிதாக்குகின்றது.

6.1. ஆயுதமேந்திய போர்வீரர்களுக்கு எதிராக பொதுமக்களை நடத்துவதில் உள்ள வித்தியாசத்தை வலியுறுத்தி, பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது பற்றி முப்படைகளுக்கு தீவிர பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும்.

6.2. மேலும், திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 95(3) ஆம் பிரிவின் பிரகாரம், சட்டத்திற்குப் புறம்பான கூட்டத்தைக் கலைப்பதிலும், தேவைக்கேற்ப ஏதேனும் கைதுகளிலும் மற்றும் தடுத்து வைப்பதிலும், அவர்கள் நியாயமான தேவைக்கேற்ப பலத்தை பிரயோகிக்க வேண்டும்.

6.3. முப்படையினருக்கு பொலிஸாரின் தொடர் கட்டளையையும் மற்றும் பொலிஸாரின் அந்தந்த தொடர் கட்டளைகளையும் பற்றிய முழுமையான அறிவு இருத்தல் வேண்டும்.

6.4. முப்படையினருக்கும் பொலிஸாரின் கட்டளை அதிகாரிகளுக்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பும் தகவல்தொடர்பு வசதியும் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

6.5. ஒரு கனிஷ்ட அதிகாரி ஒரு கேள்வியை எழுப்ப அல்லது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பான ஏதேனும் புதிய தகவலை சமர்ப்பிக்க விரும்பினால் (உதாரணமாக சிரமங்கள், அதிக பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் தேவை), அவர் அந்தப் பிரச்சினையை ஒழுங்குமுறைப்படி சேவை மூப்பு அடிப்படையில் தமக்கு உயர்ந்த ஒரு பதவி நிலையில் உள்ள அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். தொடர் கட்டளை இடையறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு இது நீண்டகாலம் எடுக்கலாம்.

6.6. எதிர்ப்பு ஆர்ப்பட்டத்தின் போது கடமையில் ஈடுபடும் இராணுவத்தினதும், கடற்படையினதும், விமானப்படையினதும் கட்டளை அதிகாரிகளினால் சம்ப நிகழ்வின் பின்னர் பொலிஸாருக்கு அவர்கள் தொகுக்கும் வகையில் மேலே சிபாரிசு செய்யப்பட்டுள்ள அறிக்கையைப் போன்ற ஒரு அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் முகமாக, அந்த அறிக்கை படிநிலையின் மிக உயர்ந்த மட்ட அதிகாரியை சென்றடைவதை உறுதிசெய்வதற்காக தனது நேரடி மேலதிகாரியிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

6.7. அதிகாரிகள் தமது கட்டளை அதிகாரியின் சட்டப்பூர்வ கட்டளையின்றி பதவிநிலையை மீறும் குற்றச்சாட்டுகள் அல்லது வேறு எந்த வகையான தவறான நடத்தைகள் முழுமையாக விசாரிக்கப்படுதல் வேண்டும். தேவைக்கேற்ப, குற்றமிழைத்த அதிகாரி உள்ளக ஒழுக்காற்று நடவடிக்கைக்கு/நிர்வாக நடவடிக்கைக்கு மற்றும் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

6.8. சட்டத்தையும் மற்றும் ஒழுங்கையும் பேணுவதற்கு கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சிறந்த தொடர் கட்டளை இன்றியமையாதது என்பதால், பொலிஸாரும் முப்படைகளை சேர்ந்த ஒவ்வொரு அதிகாரியும் முழுமையான உறுதியுடன் அத்தகைய தொடர் கட்டளை பற்றி அறிந்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். இந்த விடயத்தில் எந்தவிதமான சாக்குப்போக்குகளும் அல்லது இணக்கப்பாடுகளும் அனுமதிக்கப்படுதல் கூடாது.

## IV. ஆயத்தமும் மற்றும் தந்திரோபாய தெரிவுகளும்

### 1. ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கான முன் ஆயத்தம்

**பொது மக்கள் அடங்கலாக சம்பந்தப்பட்ட அனைவரினதும் பாதுகாப்பையும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்திலும் அதனை சூழவுள்ள சொத்துக்களினதும் பாதுகாப்பையும் செய்வதற்கு, ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு முன்னர் ஆயத்தநிலையில் இருப்பது மிகவும் முக்கியமானதாகும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தளத்தில் பொலிஸாலும் மற்றும் முப்படையினராலும் எடுக்கக்கூடிய பதிலீட்டு நடவடிக்கைகளின் தன்மையில் நேரடியாக தாக்கம் செலுத்தும் ஆயத்தநிலை இதுவாகும். மேலும் சட்டத்திற்குப் புறம்பான கூட்டங்களை சட்டரீதியாகவும் திறம்படவும் கலைக்க அவர்களுக்கு**

**உதவுவதும் இந்த ஆயத்தநிலையாகும். ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சமாளிக்க ஆயத்தமாகுவதில் மிக முக்கியமாக இருக்க வேண்டிய பின்வரும் தகவுதிறன்களை ஆணைக்குழு இனங்கண்டுள்ளது:**

1.1. ஏனைய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுதலும் தகவல்களை பகிர்ந்துகொள்ளலும்.

1.2. தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தலும் மற்றும் ஆயத்தநிலையில் வைத்திருத்தலும்.

1.3. முன்னரே தீர்மானிக்கப்பட்ட பதிலீட்டு நடவடிக்கைகள்

1.4. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல்

**2. ஏனைய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுதலும் தகவல்களை பகிர்ந்துகொள்ளலும்:**

2.1. மருத்துவ சேவைகளுடன் ஒருங்கிணைதல்

2.1.1. ஒரு வன்முறையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சாத்தியம் பற்றி வைத்தியசாலைக்கு அறியப்படுத்தியதன் பேரில், சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் அருகிலுள்ள வைத்தியசாலையுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுதல் வேண்டும்.

2.1.2. நோயாளர் காவு வண்டி (ஆம்புலன்ஸ்) மற்றும் துணை மருத்துவ பணியாளர்கள் போன்ற மருத்துவ சேவைகள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்திற்கு தடையின்றி அணுகக் கூடிய விதத்தில் அருகிலேயே ஆயத்தப்படுத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்துகொள்ள எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.1.3. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்த நபர்களுக்கு (அதிகாரிகள் பலத்தை பிரயோகித்ததால் அல்லது வேறுவிதமாக காயப்பட்டாலும் சரி) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கடமையில் ஈடுபடும் அதிகாரிகள் அத்தகைய நபர்களுக்காக மருத்துவ உதவியை கட்டாயம் நாடுதல் வேண்டும்.

2.1.4. காயமடைந்துள்ளதாக தோன்றும் நபர்களுக்கு மருத்துவ உதவியை வழங்குவதற்கு அல்லது கோருவதற்கு தவறிய அதிகாரிகள் (சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளின் பலத்தைப் பிரயோகித்ததால் அல்லது வேறுவிதமாக) பொலிஸ் கட்டளை சட்டத்தின் A19 (இன்படி) மனிதநேயம் இல்லாதவர்கள் என குற்றம் சாட்டப்படுவார்கள். பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டின் விளைவாக காயம் ஏற்பட்டால், அத்தகைய துப்பாக்கிச் சூட்டை நடத்திய உத்தியோகத்தர் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

2.2. கீழ்காணும் நிறுவனங்கள் போன்ற பிற அரசாங்க திணைக்களங்களுடனும் முகவர்நிலையங்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படுதல்:

2.2.1. தீயணைப்புத் திணைக்களம்

2.2.2. நீர், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் தரப்புகள்

2.2.3. புலனாய்வு முகவர்நிலையங்கள்

2.2.4. ஏனைய பொருத்தமான முகவர்நிலையங்கள்

2.3. தகவல்களை பகிர்ந்துகொள்ளல்:

2.3.1. சட்டத்திற்குப் புறம்பான கூட்டத்தைக் கலைக்க கூடிய விரைவான பதிலீட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் அவை நடைமுறை சாத்தியமாக இருப்பதையும் உறுதிசெய்தல்.

2.3.2. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற சிறந்த பாதுகாப்புத் திட்டத்தைத் தீர்மானிக்க, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பான தகவல்களும் மற்றும் ஏனைய பொருத்தமான தகவல்களும் பல தகவல் மூலங்களிலிருந்து பெறப்படுதல்.

2.3.3. இவ்வாறு பொலிஸாரால் சேகரிக்கப்படும் தகவல்கள் முழுப் பொலிஸ் படைக்கும் பரப்பப்படுதல் வேண்டும். மேலும் முப்படைகளின் கட்டளை அதிகாரிகளுடன் முடிந்தவரையில் சாத்தியமான முறையில் அத்தகைய தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

2.3.4. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலைகளுக்கு தனித்துவமான ஒரு பாதுகாப்பு திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்களின் பகுப்பாய்வின் மூலம் உளவுத்துறை சார்ந்த தகவல்கள் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

## 3. தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தலும் மற்றும் ஆயத்தநிலையில் வைத்திருத்தலும்

3.1. கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாத ஆயுதங்கள் (உ+ம்: தண்ணீர் பீரங்கி, கண்ணீர்ப்புகை குண்டுகள்) மற்றும் ஆபத்தான ஆயுதங்கள் என்பன சட்டத்திற்குப் புறம்பான கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஆயத்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

3.1.1. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் (OHCHR) அலுவலகத்தின்படி, சட்டத்தை அமுலாக்கும் நடவடிக்கையில் ஆயுதங்கள் சட்த்தை அமுலாக்கும் நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

3.1.2. அந்த நோக்கத்திற்காக, ஆயுதங்களும் மற்றும் உபகரணங்களும் (உ+ம்: குறிப்பாக கண்ணீர் புகையின் இரசாயன கூறு) தேவைப்பட்டால் அரசாங்க பகுப்பாய்வாளர்கள் திணைக்களத்தினதும் மற்றும் சுகாதார அதிகாரிகளினதும் சுயாதீன சோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

3.1.3. ஆயுதங்களும் சம்பந்தப்படும் உபகரணங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் பொலிஸ் கட்டளை சட்டத்தின் A19, 25 ஆம் பிரிவுகளின் பிரகாரம், அவை சிறந்த நிலையில் உள்ளனவா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு (உ+ம்: காலாவதியாகவில்லையா) சோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

3.2. பின்வருவனவற்றை சேமித்து வைக்க வேண்டிய ஆர்ப்பாட்ட இடத்திலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் முக்கிய கட்டடப் பகுதிகள் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

3.2.1. அமைதியான ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சட்டவிரோதமான ஒன்றாக மாறும்போது, முழுமையான சிவில் இடையூறு சாதனங்கள் (உதாரணமாக: கேடயங்கள், வாயு முகமூடிகள், தடியடிகள், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாத மற்றும் ஆபத்தான ஆயுதங்கள்) பயன்படுத்தப்படலாம். அபாயமான ஆயுதங்கள் மக்கள் கூட்டத்தை அநேகமாக மேலும் ஆத்திரமூட்டலாம் என்பதால் இந்த நிலை வரும் வரை, அத்தகைய ஆயுதங்களை காட்சிப்படுத்தவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது.

3.2.2. உணவுகளும் பானங்களும் (குடிப்பதற்கும் கண்ணீர்ப்புகை பாதிப்பிலிருந்து நிவாரணம் பெறுவதற்கும்) வழங்கப்படுதல் வேண்டும்.

3.3. தேவைப்படும் பிற வகையான உபகரணங்களில் பின்வருவன அடங்கும். ஆனால் அவை பின்வருவனவற்றுக்கு மட்டுப்பட்டதல்ல:

3.3.1. மெகாஃபோன்கள்

3.3.2. வெள்ள விளக்குகள் (இரவில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பயன்படுத்தப்படும்)

3.3.3. சட்டவிரோத எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை சட்டப்பூர்வமாக கைது செய்வதற்கு சரியான உபகரணங்கள்

3.3.4. காப்பு வாகனங்களும் மேலதிக எரிபொருட்களும்

3.3.5. தொடர்பாடல் சாதனங்கள்

3.3.6. நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் பொதுமக்களால் அமைக்கப்பட்டுள்ள ஏதாவது தடைகளை (உதாரணம்: வாகனங்கள், பீப்பாய்கள்) அகற்றுவதற்கான உபகரணங்கள்

3.4. பொலிஸ் ஊடகப் பிரிவும் மற்றும் குற்றப் பதிவுப் பிரிவும் (CRD) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் முன்னேற்றத்தைக் காணொளியில் பதிவதற்காக பணியாளர்களை

அனுப்ப வேண்டும். பின்னர் மறுபரிசீலனை செய்வதற்கான ஆதாரங்களை சேகரிப்பதற்காக நிகழ்வுகளின் ஒழுங்கில் ஒரு பதிவை வழங்க வேண்டும்.

4. **முன்னரே தீர்மானிக்கப்பட்ட பதிலீட்டு நடவடிக்கைகள்**

4.1. நிகழ்வின் போது குறிப்பிட்ட குற்றச்செயல்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட பதிலீட்டு நடவடிக்கைகளை/தெரிவுகளை தீர்மானித்துக்கொள்ளுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். இதில் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்படும் குற்றவியல் சேதம், தீ வைப்பு, சூறையாடுதல், காழ்ப்புணர்ச்சி, உடல் ரீதியான தாக்குதல்கள் என்பவற்றுக்கு எதிராகவும், ஒரு அதிகாரிக்கு அல்லது சமூக உறுப்பினருக்கு மீட்பு வசதி தேவைப்படும் போதும் அவசரநிலைகள் அடங்கலாக, திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கு இணங்க பதிலீட்டு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

4.2. கூட்டம் அமைதியாக இருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தை சாத்தியமாகும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டத்தை மீறுவது விருப்பமான ஒன்றல்ல.

4.3. ஒரு பாதுகாப்புத் திட்டம் கட்டளை அதிகாரிகளால் வகுத்தமைக்கப்படுதல் வேண்டும்.

4.4. சட்டத்திற்குப் புறம்பாக மக்கள் கூட்டம் கூடுவதை தடுப்பதற்கு அபாயமில்லாத மற்றும் அபாயமான ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் விஷேட பயிற்சி பெற்ற அதிகாரிகள் போதுமான எண்ணிக்கையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

4.5. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளங்களில் விஷேட மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களை கையாள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

4.6. பின்வருவனவற்றுக்கு ஒரு விஷேட விசாரணைக் கருமபீடம் அமைக்கப்படுதல் வேண்டும்:

4.6.1. பொலிஸ் நிலையங்களில் கைது செய்யப்பட்டவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பது பற்றிய தகவல்கள் வழங்குதல்

4.6.2. சித்திரவதை அல்லது பிற துர்நடத்தை பற்றிய முறைப்பாடுகளை பதிவு செய்தல்

4.6.3. அத்தகைய கருமபீடம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நிருவகிக்கப்படுதல் வேண்டும் (முறைப்பாடுகளை விசாரிப்பதற்கும் தீர்வு வழங்குவதற்கும் ஒரு சுயாதீனமான அமைப்பு இருக்க வேண்டும்).

4.7. சுற்றுப்புறப் பாதுகாப்பு பலப்படுத்தப்படுதல் வேண்டும்.

4.7.1. குறிப்பிட்ட இடங்களை நடைமுறையில் அணுக முடியாத வகையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத பட்சத்தில், பொதுமக்களையும் மற்றும் சொத்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டு பொலிஸார் உரிய பொருத்தமான தடைகளை அமைக்கலாம்.

4.7.2. ஒரு பாதுகாப்பு விடயம் அல்லாத பட்சத்தில், பொதுமக்கள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துவதற்கும் அதற்கேற்ப அவர்களின் பயணங்களைத் திட்டமிடுவதற்கும் இரும்புத் தடுப்புகளால் அடைக்கப்பட்ட பாதைகள் பற்றிய ஒரு ஊடக அறிக்கை வெளியிடப்படுதல் வேண்டும்.

5. **எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல்**

**5.1. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பற்றி சேகரித்த தகவல்கள், பொலிஸாரினதும் மற்றும் முப்படைகளினதும் ஒருங்கிணைப்பை தேவைப்படுத்தும் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றிய நுண்ணறிவை வழங்கும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடைய பகுதிகளில் நியாயாதிக்கம் உடைய பொலிஸ் நிலையங்களுடன் முடிந்தவரை அவற்றின் பதிலளிக்கும் திறனைத் தீர்மானிக்கும் பொருட்டு கலந்துரையாடல்கள் நடத்தப்படுதல் வேண்டும்.**

**5.2. கண்காணிப்பு உத்திகளை சட்டப்பூர்வமாக செயல்படுத்துவதில் அதிக பயிற்சி பெற்ற நடமாடும் அதிகாரிகள் (உதாரணமாக: மோட்டார் சைக்கிள்களில் அல்லது கால் நடையில் பயணம் செய்பவர்கள்) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளங்களில் நிறுத்தப்படுதல் வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது.**

5.2.1. தொடர்ந்து நிலைமையை மதிப்பிட்டு, மக்கள் கூட்டத்தின் நிலை பற்றிய தகவல்களை இற்றைப்படுத்துதல்.

5.2.2. மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த தேவைப்படும் மேலதிக பணியாளர்களை அல்லது பிற வளங்களை தீர்மானித்தல் மற்றும்

5.2.3. தமது முடிவுகளை பொலிஸாரிடமும் மற்றும் முப்படைகளின் கட்டளை அதிகாரிகளிடமும் தெரிவித்தல். இதன் மூலம் அவர்கள் மிகச்சிறந்த நடவடிக்கையை, அண்மைகால தகவல்களில் அடிப்படையில் தீர்மானிக்க முடியும்.

**6. குறிப்பிட்ட தந்திரோபாய தெரிவுகளை தீர்மானித்தல்**

6.1. ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் போது, பொலிஸ் கட்டளை அதிகாரிகளும் ஆயுதப் படைகளின் கட்டளை தளபதிகளும் தேர்ந்தெடுக்க பரந்த அளவான தெரிவுகளை கொண்டிருப்பார்கள். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் மாறக்கூடிய மற்றும் கணிக்க முடியாத தன்மை காரணமாக, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்தில் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கடுமையான ஒரு திட்டத்தை உருவாக்க முடியாது என்பது புரிந்துகொள்ளத்தக்கது. ஆகையால், கட்டளை அதிகாரிகள் சூழ்நிலைகள் மற்றும் வளங்களும் மற்றும் பணியாளர்களும் கிடைக்கும் தன்மையைப் பொறுத்து ஒரு நெகிழ்வான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6.2. எவ்வாறாயினும், ஒரே நேரத்தில் அல்லது வெவ்வேறு நேரங்களில் ஒரு தந்திரோபாய தெரிவை அல்லது பல தந்திரோபாய தெரிவுகளை பயன்படுத்த தீர்மானிக்கும் போது, பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது:

குறிப்பிட்ட தந்திரோபாய தெரிவை பயன்படுத்துவதன் பின்னணியில் உள்ள நோக்கம் தந்திரோபாய தெரிவின் வெற்றியை அளவிடுவதற்கான சுட்டிகள்

குறிப்பிட்டவொரு தந்திரோபாய தெரிவு பயன்படுத்தப்பட்டால் (பணியாளர்கள் மற்றும் பிற வளங்கள் போன்றவை) நோக்கம் கொண்ட இலக்கை அடைவதற்குத் தடையாக இருக்கும் அல்லது உதவும் காரணிகள்

தந்திரோபாய தெரிவை பயன்படுத்துவதில் அல்லது மீளப்பெறுவதில் உள்ள அபாயங்களின் மதிப்பீடு (பொதுமக்கள் பாதுகாப்பு, சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் பொலிஸாரின் சட்டபூர்வமான தன்மை போன்றவை)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டம் மற்றும் இது தொர்பாக பொலிஸாரும் ஆயுதப் படையினரும் பணிக்கப்படுகின்ற தற்போதைய வழிகாட்டல்கள் அடங்கலாக தற்போதய சட்டத்தின் வெளிச்சத்தில் தந்திரோபாயத்தைப் பயன்படுத்துவதிலுள்ள நியாயத்தன்மையும் மற்றும் அதன் அவசியமும்

## V. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது விஷேட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைக் கையாளுதல்

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளும் விஷேட மற்றும் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு பொலிஸாரும் மற்றும் முப்படையினரும் விஷேட ஏற்பாடுகளை செய்ய வேண்டும். (இது சம்பந்தமாக அரசின் பொதுவான கடமைகளுக்கு மேலே உள்ள பாகம் I (VIII) ஐப் பார்க்கவும்)

### i. பாதிக்கப்படக்கூடிய குழுக்கள்

பொது விவகாரங்களில் பங்கேற்பதற்கான உரிமையை செயன்முறை ரீதியாக செயற்படுத்துவது பற்றி, அரசுகளுக்கு மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரின் ஐக்கிய நாடுகள் அலுவலகம் வழிகாட்டிய வழிகாட்டல்களின் பிரகாரம், பின்வரும் குழுக்களை சேர்ந்த 31 நபர்கள் பாதிக்கப்படக்கூடியவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகையால், பின்வரும் நபர்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஆணைக்குழு பின்வரும் சிபாரிசுகளை முன்மொழிகின்றது.

1. பெண்கள்
2. சிறுவர்கள்
3. முதியோர்கள்
4. இயலாமையுடைய ஆட்கள்
5. LGBTQIA+

**சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு உரிய பொதுவான சிபாரிசு:**

நடைமுறையில், இந்த நபர்களின் குழுக்களுக்கு மரணத்தை ஏற்படுத்தாத மற்றும் ஆபத்தான ஆயுதங்களை உள்ளடக்கிய மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தும் தந்திரோபாயங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்திற்கு அருகாமையில் ஒரு பகுதி குறித்தொதுக்கப்படுதல் வேண்டும். இந்த நபர்களுக்கு அடிப்படை முதலுதவி, உணவு மற்றும் தண்ணீர் என்பனவும் கிடைக்கச்செய்யப்படுதலும் வேண்டும்.

1. **பெண்கள்**

   1.1. பாகுபாடு, இழிவான செய்கை அல்லது இழிவான வார்த்தைகள் ஏதும் பிரயோகிக்கப்படவில்லை என்பதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.

   1.2. நியாயமான விகிதத்தில் பெண் அதிகாரிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளங்களுக்கு அனுப்பப்படுவதையும், பெண்கள் தொடர்பான மக்கள் கூட்டத்தைக் கலைக்கும் தந்திரங்கள் முடிந்தவரை பெண் அதிகாரிகளால் செயற்படுத்தப்படுவதையும் அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.

   1.3. ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு பெண்ணை உடற்சோதனைக்கு உட்படுத்த தேவையான போது, திருத்தப்பட்டுள்ள 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி, ஒரு பெண் அதிகாரியால் அத்தகைய உடற்சோதனை நடத்தப்படுதல் வேண்டும்.

2. **சிறுவர்கள்**

   எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் உள்ள சிறுவர்களுக்கு அதிக பாதுகாப்பு அளிக்கப்படுதல் வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகின்றது. அத்துடன் இது முக்கியமானது:

   2.1. சிறுவர்கள் இருப்பதாக அறியப்படும் அல்லது நம்பப்படும் இடங்களில் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்படக்கூடாது. அத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மக்கள் கூட்டத்தை கலைந்து செல்லும்படி எச்சரிக்கை விடுக்கப்படுவதை உறுதிசெய்து, கலந்துகொள்ளும் எந்த சிறுவர்களும் கலைக்கப்படும் போது அவர்கள் மீது விஷேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

   2.2. பெற்றோரிடமிருந்து பிரிந்து இருக்கும் சிறுவர்களை பாதுகாப்பதற்கும் அவர்களைக் கையாள்வதற்கும் அதிகாரிகள் 'உளவியல் பயிற்சியை' கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

3. **முதியோர்கள்**

   **முதியவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும். அதே நேரம் அவர்களின் உடல் ரீதியான வரையறைகளை கருத்தில் கொள்ளவும் வேண்டும்.**

**4** இயலாமையுடைய ஆட்கள்

4.1 மாற்றுத்திறனாளிகள் அமைதியாக ஒன்று கூடும் உரிமையைப் பிரயோகித்தால் அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும்.

4.2 அவர்களின் தனிப்பட்ட உடல் மற்றும் மன பண்புகளுக்கு இடமளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இது சம்பந்தமாக, பின்வரும் நடவடிக்கைகள் சிபாரிசு செய்யப்படுகின்றன:

4.2.1 மாற்றுத்திறனாளிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வார்கள் என்பது பற்றி அதிகாரிகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

4.2.2 சேவை நாய்கள், கைத்தடிகள், சக்கர நாற்காலிகள் அல்லது பிற தொழில்நுட்ப உதவிகள் மூலம் உதவி பெறும் ஊனமுற்ற நபர்களை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்திலோ அவர்களிடமிருந்து பிரிக்கக் கூடாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

**ii. விஷேட சமூகக் குழுக்கள்**

பின்வரும் நபர்கள் அடங்கிய குழுக்கள் பொலிஸாரினதும் மற்றும் முப்படைகளினதும் விஷேட பாதுகாப்பையும் கரிசனையையும் நாடுவார்கள்:

1. ஊடகவியலாளர்கள்
2. மதகுருமார்கள்
3. பார்வையாளர்கள்

**1. ஊடகவியலாளர்கள்**

1.1. சட்டத்தின் ஆட்சியால் ஆளப்படும் எந்தவொரு நாட்டிலும் ஊடகங்கள் முதன்மையான பங்கை வகிக்கின்றன. அத்துடன் அத்தியாவசிய தொழிற்பாடுகளையும் நிறைவேற்றுகின்றன. பொது மக்களுக்குத் தெரிந்துகொள்ள உரிமை உண்டு என்பதால் 'பொதுக் கண்காணிப்பாளர்' என்ற வகையில் ஊடகங்களின் பங்கு, பொது நலன் சார்ந்த விடயங்கள் பற்றிய தகவல்களை சேகரித்து வழங்குவதாகும்- இந்தச் சூழலில் ஊடகப் பிரதிநிதிகளின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் அவர்கள் பிரசன்னமாகுவது பொது ஒழுங்கை பாதுகாப்பதற்கு அல்லது எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்படும் முறையியல்கள் அடங்கலாக அதிகாரிகளையும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களையும் மற்றும் பொதுமக்களையும் பெருமளவில் அவர்களின் நடத்தைக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கு ஒரு உத்தரவாதமாக அமைகின்றது.

1.2. ஒரு கூட்டத்தை பற்றிய ஊடக அறிக்கைகளும் மற்றும் ஏனைய அறிக்கைகளும் பொதுமக்களுக்கும், ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்பவர்களுக்கும், கூட்டத்தில் கலந்துகொள்பவர்களுக்கும் அவசியமானதாகும். ஆகையால், கண்காணிப்பதற்கான சாத்தியமும் அறிக்கையும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்திற்கான

உரிமையின் இன்றியமையாத பாகமாக அமைகின்றன. சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களை பொறுத்தவரை, கண்காணிப்பாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளாத மூன்றாம் தரப்பு நபர்களாக வரையறுக்கப்படுகின்றனர். இவர்களின் அடிப்படை நோக்கம் பொதுமக்களினது கூட்டங்களில் நடவடிக்கைகளையும் மற்றும் செயல்பாடுகளையும் அவதானித்து பதிவு செய்வதாகும்.

1.3. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது ஊடகங்களின் பங்கு பற்றிய மனித உரிமைகள் குழுவின் 37-வது பொதுக் கருத்துக்கு ஆணைக்குழு கவனத்தை ஈர்க்கின்றது. அதில், 'அமைதியாக ஒன்றுகூடும் உரிமையை முழுமையாக அனுபவிப்பதற்கு பத்திரிகையாளர்களினதும், மனித உரிமைகள் பாதுகாவலர்களினதும், தேர்தல் கண்காணிப்பாளர்களினதும் மற்றும் கூட்டங்களை கண்காணிப்பதில் அல்லது அறிக்கையிடுவதில் ஈடுபட்டுள்ள மற்றையவர்களினதும் பங்கு முக்கியமானதாகும்'.

1.4. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 14 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம், ஊடகவியலாளர்கள் வெளியீட்டு சுதந்திரம் அடங்கலாக பேச்சு சுதந்திரற்கான உரிமையையும் மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையையும் கொண்டுள்ளனர். ஆகையால், இந்த உரிமையை சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் பாதுகாக்க வேண்டும். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளங்களில் ஊடகவியலாளர்களின் உரிமைகள் பொலிஸாராலும் முப்படையினராலும் போதுமான அளவு இனங்காணப்பட்டு மதிக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

1.5. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை பயனுள்ளவாறு நிறைவேற்றும் வகையில் அவர்களை அனுமதிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது:

1.5.1. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளின் கடமைப் பணிக்கு ஊடவியலாளர்களின் பௌதீக ரீதியான பிரசன்னம் தொடர்ச்சியாக கணிசமானளவு தடையாக அல்லது தடங்கலாக அமையும் பட்சத்தில் (விதிவிலக்காக) மட்டுமே ஊடகப் பணியாளர்கள் பொலிஸாரின் பணியை அவதானித்து பதிவு செய்வதிலிருந்து தடுக்கப்படுதல் வேண்டும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், ஊடகங்களுக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். மேலும் கலைந்து செல்வதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படுதலும் வேண்டும். ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கூட்டத்தை போதுமான அளவில் அணுவுவதற்கு தேவையான ஏனைய வாய்ப்புகள் வழங்கப்படுதலும் வேண்டும். கூட்டத்தை கலைப்பதற்கான சட்டப்பூர்வ உத்தரவை ஊடகவியலாளர்கள் ஏற்க மறுத்தால், பொலிஸார் நியாயமாக பதிலளிக்கலாம்.

1.5.2. ஊடகவியலாளர்களும் மற்றும் பத்திரிகையாளர்களும் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளும் நபர்களிலிருந்து அவர்களை வேறுபடுத்துவதற்கு சில அடையாளங்களை முடியுமான வரை காண்பிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அடையாளம் காணக்கூடிய சில ஆடைகளை அணிவதும் அல்லது தேவைக்கேற்ப காண்பிக்கக்கூடிய அடையாள அட்டையை எடுத்துச்செல்வதும் இதில் அடங்கும்.

1.5.3. ஊடகப் பிரதிநிதிகளுக்கு எதிராக நிகழும் வன்முறை சம்பவத்தில், ஏனைய சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும், சட்டத்திற்குப் புறம்பாக பலத்தைப் பிரயோகித்தால் அதற்கு எதிராக முழுமையான சுயாதீனமான ஒரு விசாணை நடத்தப்படுதல் வேண்டும். மேலும், குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுதலும் வேண்டும். மேலும் பத்திரிகையாளர்களுக்கும் மற்றும் எனைய ஊடகவியலாளர்களுக்கும் எதிராக குற்றங்களைச்செய்த குற்றவாளிகளை சட்டத்தின் முன்கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

1.5.4. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அணுவுவதற்கும், படம்பிடிப்பதற்கும், பதிவு செய்வதற்கும் ஊடகங்களுக்கு இருக்கின்ற உரிமை பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

1.5.4.1. எந்தவொரு செய்தி சேவையினதும் (ஒன்லைன், அச்சீடு, வானொலி அல்லது தொலைக்காட்சி) அடையாளம் காணப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்திற்கு செல்வதற்கான அணுகலை அதிகாரிகள் மறுக்கக்கூடாது.

1.5.4.2. பொதுமக்களுக்கு தெரிவிக்கும் முகமாக தகவல்களை சேகரிப்பதிலிருந்து, பெறுவதிலிருந்து அல்லது படிமுறைப்படுத்துவதிலிருந்து அதிகாரிகள், அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஊடகப் பிரதிநிதிகளை தடுக்க அல்லது தலையீடுசெய்ய அல்லது அவர்களை தாக்கக் கூடாது.

1.5.4.3. ஊடகவியலாளர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தளத்திற்குக் கொண்டு வரப்படும் எந்த ஊடக உபகரணமும் சேதப்படுத்தப்படாமல் அல்லது அழிக்கப்படாமல் இருப்பதையும், அதன் பயன்பாடு எந்த வகையிலும் தடைபடாமல் இருப்பதையும் அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும் (உதாரணமாக: புகைப்படக்கருவியின் லென்ஸை மூடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது).

1.5.4.4. கலைப்பதற்கான ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், கைதுகள் செய்யப்பட்டாலும் கூட, தெளிவாக அடையாளம் காணப்பட்ட ஊடகவியலாளர்கள் அவாகளின் தொழில்சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

1.6. அதிகாரிகள் மேலும் அவர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவும் மக்கள் அவர்களின் ஊடாக நல்லுறவை வளர்த்துக்கொள்ளவும் ஊடகவியலாளர்களுக்கு இடமளிக்கப்படுதல் வேண்டும்.

1.6.1. பின்வருவனவற்றின் ஊடாக: ஊடக அணுகலுக்கான நடைமுறைகளை தாபித்தல்

1.6.2. ஊடகப் பிரதிநிதிகளுக்கான ஒரு மேடை நிலைப்பாட்டை உறுதிசெய்தல்.

1.6.3. ஊடக இயக்கத்தினதும் மற்றும் உபகரணங்களினதும் நிலைப்பாடு தொடர்பான உதவி.

1.7. இந்த பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் உள்ள ஊடகவியலாளர்கள் தம்மிடம் செல்லுபடியாகும் அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு, பொலிஸாரும் மற்றும் முப்படையினரும் மரியாதையுடன் அத்தகைய அடையாள அட்டையை சமர்ப்பிக்குமாறு கேட்கும் போது காண்பிக்க (உ+ம்: ஊடக உபகரணங்களை மட்டும் எடுத்துச்செல்லும் நபருக்கு அதே பாதுகாப்பிற்கு உரிமை கிடையாது) வேண்டும்.

1.8. ஊடகவியலாளர்களைத் தாக்குவதற்கு பொலிஸாருக்கு அல்லது முப்படையினருக்கு ஊடகவியலாளர்களின் ஆத்திரமூட்டல் ஒரு தற்காப்பு அல்ல.

1.9. ஊடகப் பிரதிநிதிகள் இலங்கையின் சட்டங்களை மீறும் செயலில் ஈடுபட்டால், மேற்கூறிய சிபாரிசுளில் எதுவும் பொலிஸாரையும் மற்றும் முப்படையினரையும் சட்டத்தை அமுல்படுத்தும் கடமையிலிருந்து தடுக்காது என்பதை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

2. **மதகுருமார்கள்**

**எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளும் மதகுருமார்கள் வன்முறையில் ஈடுபடாதபட்சத்தில், அவர்களின் அந்தஸ்துக்குரிய அதிகபட்ச மரியாதையுடன் அர்கள் நடத்தப்படுதல் வேண்டும்.**

3. **பார்வையாளர்கள்**

3.1. குறித்த பகுதியில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் போது, எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை பார்வையாளர்களிடமிருந்து வேறுபடுத்துவது கடினம் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

3.2. சாத்தியமான வரையில், பார்வையாளர்கள் தடையின்றி சுதந்திரமாக செல்ல அனுமதிக்கப்படுதல் வேண்டும். இது சிபாரிசு செய்யப்படுகின்றது:

3.2.1. பார்வையாளர்கள் மக்கள் கூட்டத்தை விட்டு வெளியேறுவதை அனுமதிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலிருந்து பாதுகாப்பாக செல்வதற்கான பாதைகளை கண்டறியவும் வேண்டும். அதிகாரிகள் ஆயத்தமாகும் கட்டத்தில் இந்த வழிகளை தீர்மானிக்க வேண்டும்.

3.2.2. அதிகாரிகள் மெகாஃபோன்கள் மூலம் கூட்டத்தினருடன் தொடர்புகொண்டு, சட்டவிரோத எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் சட்டரீதியான

விளைவுகளை, பார்வையாளர்களும் கேட்கும் வகையில் தெரிவிக்கவும் வேண்டும்.

3.2.3. பார்வையாளர்கள் பாதிக்கப்படக்கூடாது அல்லது அதிகாரிகளால் தவறாகக் கைது செய்யப்படுதல் கூடாது என்பதை உறுதிசெய்ய, கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் தீங்கற்ற முறைகளைப் பிரயோகிக்க முன்னர் இதுபோன்ற எச்சரிக்கைகள் விடுக்கப்படுதல் வேண்டும்.

## VI. அரசாங்கத்திற்கு சொந்தமான பொது சொத்துக்களுக்கு அல்லது தனியார் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்படும் குற்றவியல் சேதத்தையும் மற்றும் அவற்றின் மீது மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான ஆக்கிரமிப்புகளையும் கையாளுதல்

### i. சட்டவிரோத ஆக்கிரமிப்பையும் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்படும் குற்றவியல் சேதத்தையும் தடுத்தல்

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 மற்றும் யூலை மாதம் 9 ஆம் திகதிகளில் அழிவுகரமான சம்பவங்களுக்கு வழிவகுத்த சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தல் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்படும் குற்றவியல் சேதம் ஆகியவற்றைத் தடுப்பதற்கு பின்வரும் சிபாரிசுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

1. சாத்தியமான தாக்குதல் பற்றிய தகவல்களை பொலிஸார் பெற்றுக்கொள்ளும் அல்லது அத்தகைய தகவல் பொலிஸாருக்கு கிடைக்கும் போது, அவை பாரதூரமானவை எனக் கருதப்படுதல் வேண்டும். மேலும் தனிப்பட்ட முறையில் பொலிஸாரை அணுகும் நபர்களுக்கு பதில் அளிக்கப்படுதலும் வேண்டும்.

2. ஒரு பாதுகாப்புத் திட்டம் வகுத்தமைக்கப்படுதல் வேண்டும். மேலும், சாத்தியமான காரண விடயம் அல்லது உண்மையான வன்முறை நிகழ்வு பற்றிய தகவல் கிடைத்தன் பேரில் உடனடியாக குறித்த பகுதியில் நியாயாதிக்கம் உடைய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெளிவான ஒரு தொடர் கட்டளையை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

3. உரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துடன் சம்பந்தப்படும் சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகின்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபார் மட்டம் வரை மேற்குறித்த தகவல் தொடர் கட்டளையின் ஊடாக பகிர்ந்துகொள்ளப்படுதல் வேண்டும்.

4. அச்சுறுத்தலின் தன்மைக்கு ஏற்றவாறு முப்படைகளின் உதவி தேவைப்படும் போது, 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை (திருத்தல்) சட்டத்தின் 95(3) ஆம் பிரிவின்படி, அத்தகைய உதவியை பொலிஸார் நாடுதல் வேண்டும். எவ்வாறாயினும், ஊரடங்கு உத்தரவு அல்லது அவசரகால சட்டம் நடைமுறையில் இருக்கும் பட்சத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 2, 12 ஆம் பிரிவுகளின்படியும், குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 96 ஆம் பிரிவின்படியும், அத்தகைய ஒரு வேண்டுகோள் இல்லாதிருந்தாலும், மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் முப்படையினர் பங்கேற்கலாம்.

5. அச்சுறுத்தலை சமாளிப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களை கொண்ட பொdxஸிஸ் பிரிவுகள் முற்படைப் பிரிவுகளுடன் (தேவைப்பட்டால்) ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.

6. அதிகாரிகள் இயன்றவரை மக்கள் கூட்டத்தினரிடம் நியாயமான காரணத்தை குறிப்பிட்டு அவர்களை கலைந்து செல்லுமாறு பணிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் கட்டுப்படுவதற்கு தவறினால், கூட்டத்திற்கான அவர்களின் நோக்கம் கொண்ட செயல்களின் சட்டரீதியான விளைவுகளையும் அவர்களுக்கு நினைவூட்டுதல் வேண்டும்.

7. சம்பவ இடத்திற்கு அனுப்பப்படும் உத்தியோகத்தர்களிடம், தீங்கற்ற கட்டுப்பாட்டு முறைகள் (சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்களில் காணப்படும் கட்டுப்பாட்டு முறைகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள), உயிருக்கு ஆபத்தை விளைவிக்காத ஆயுதங்களும் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட தளத்தில் கட்டளை அதிகாரி விடுக்கும் கட்டளையின் பேரில் பயன்படுத்தப்படும் ஆபத்தான ஆயுதங்களும் அடங்கலாக போதியளவு ஆயுதங்கள் இருத்தல் வேண்டும்.

8. சம்பவ இடத்தில் உள்ள கட்டளை அதிகாரியால் உத்தரவிடப்பட்டாலன்றி, சம்பவ இடத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் தரநிலையை மதித்து நடக்க வேண்டும்.

9. உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்னர், சட்டப்பூர்வ விளைவுகள் பற்றி அச்சப்படாமல், சொத்துக்களுக்கான குற்றவியல் சேதம் மற்றும் சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தல் ஆகியவற்றை தடுக்க சட்டப்பூர்வமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் (இது விழிப்புணர்வு வேலையரங்குகளின் மூலம் பொலிஸ் பயிற்சியில் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும்).

10. சொத்துக்களைப் பாதுகாக்கும் கடமையை மீறுகின்றதும், கட்டளை அதிகாரியின் உத்தரவை மறுக்கின்றதுமான உத்தியோகத்தர் அடையாளம் காணப்பட்டு, ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

11. குற்றவியல் அத்துமீறல், சட்டவிரோதமாக வளாகங்களை ஆக்கிரமித்தல் மற்றும் சொத்து சேதம் ஆகியவற்றைத் தடுப்பதற்கு பொருத்தம் என்றிருக்கும் போது, அவ்வாறு தடுப்பதற்கான பொறுப்புடைய பொலிஸாரும் முப்படைகளும், அந்தப் பகுதியில் நியாயாதிக்கம் உடைய நீதிவானிடமிருந்து ஒரு நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. நீதிமன்ற உத்தரவை எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு காண்பிக்க வேண்டும். மேலும் சட்டத்திற்குப் புறம்பாக வளாகங்களை ஆக்கிரமித்துள்ள நபர்களை, தேவையான பலத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு, அவர்கள் அத்தகைய வளாகங்களை விட்டு வெளியேற வேண்டிய காலக்கெடுவை அவர்களுக்கு அறிவிக்கும் வகையில் ஊடகங்களுக்கு வெளியிடுதலும் வேண்டும். ஒரே மாதிரியான பல எச்சரிக்கைகளையும் விடுக்கலாம்.

**ii. வளாகங்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள நபர்களை அகற்றுதல்**

1. சட்டவிரோதமான ஆக்கிரமிப்பு ஏற்கனவே நிகழ்ந்திருக்கும் போது, எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டவரையறையை மீறி செயல்படுகின்றார்கள் என கருதப்படுவார்கள்.

2. மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள் சட்டவிரோத எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவதற்கு பிரயோகிக்கப்படலாம். எனினும் சூழ்நிலைகளின் போது நியாயமான முறையில் தேவைப்பட்டால் மட்டுமே அதிகாரத்தை பயன்படுத்தி அத்தகைய முறைகளை பிரயோகிக்க வேண்டும்.

3. ஆர்ப்பாட்டக்காரர்கள் வளாகங்களை விட்டு வெளியேறுவது தெரிந்தவுடன், பொலிஸாரும் முப்படையினரும் தமது வெளியேற்றும் முயற்சியை நிறுத்திவிட்டு, வெளியேற்றும் நடவடிக்கை தற்போது முடிவடைந்துள்ளதால் அவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும்.

**VII. ஊரடங்கு உத்தரவு அல்லது அவசரகால சட்டங்கள் அமுலில் இருக்கும் போது நடத்தப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை சமாளித்தல்**

1. அரசியலமைப்பின் 14(1) (ஏ) உறுப்புரையின் கீழ் சகல பிரஜைகளுக்கும் நடமாடும் சுதந்திரம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அரசியலமைப்பின் 15(6), (7) உறுப்புரைகளின்படி, அது தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக மட்டுப்படுத்தப்படலாம்.

2. ஒரு பகுதியில் ஊரடங்கு சட்டம் அல்லது அவசரகால சட்டம் அமுலில் இருக்கும் போது, நம்பகமான ஆதாரங்கள் மூலம், அதன் மீறுகை நிகழலாம் என்பது தெளிவானது என பின்வருமாறு ஆணைக்குழு சிபாரிசு செய்கின்றது:

   2.1. ஒரு அவசர பாதுகாப்பு நிலைமையிலும் கூட வீதிகளின் ஓரமாக பாதுகாப்பு சோதனைச்சாவடிகளை அமைக்கின்ற போது நடமாடுவதற்கான சுதந்திரம் மீறப்படும் வகையில் தன்னிச்சையான முறையில் அமைக்கப்படாமல் இருப்பது மிகவும் முக்கியமானது (*ரொட்ரிகோ எதிர் இமல்கா, கிருலப்பன உ.பொ.ப.* உயர்நீதிமன்றம் (SC) (FR) இலக்கம் 297/2007 S.C. குறிப்பு - 2007.12.03).

   2.2. நியாயாதிக்கம் உடைய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி (OIC) தனது பொலிஸ் உத்தியோகத்தர்களை, பதற்றமான பகுதிகளில் வழமையாக ரோந்துப் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

   2.3. பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (பொ.பொ.அ.) கும்பல் வன்முறை அல்லது சேதங்கள் பற்றிய சம்பவங்கள் நிகழக்கூடிய பகுதிகளைக் கண்டறிந்து, மாவட்டங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை எளிதாக்கும் பொருட்டு மாகாண பிரிதிப் பொலிஸ்மா அதிபர்களின் (பி.பொ.அ.) கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

   2.4. ஏதாவது ஒரு வகை கும்பல் வன்முறையால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் உத்தியோகபூர்வ

இணையத்தளங்கள் அடங்கலாக வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடக தளங்கள் என்பவற்றின் மூலம் அறிவிப்பதற்கு கூடுமான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

2.5. ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களை பொலிஸார் கைது செய்தல் மற்றும் ஊரடங்கு உத்தரவின் போதும் சட்டவிரோதமான கூட்டங்களை கலைத்தல் ஆகியவை 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை (திருத்தல்) சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.6. அவசரகால சட்டங்கள் அமுலில் இருக்கும் போது, பொலிஸார் அழைக்கா விட்டாலும், நடத்தப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில், முப்படை மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தலாம். எனினும் பொலிஸாருடன் தொடர்புகொண்டு அவர்களின் ஒருங்கிணைப்பில் அவ்வாறு கட்டுப்படுத்துவது சிறந்ததாகும்.

**பாகம் III: அமுலாக்கல்**

1. ஆணைக்குழுவின் மேற்குறித்த சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்கள், பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில், பொலிஸாராலும் முப்படையினராலும் தமது கடமைகளை நிறைவேற்றும் போது கருத்திற்கொள்ள வேண்டும் என சிபாரிசு செய்யப்படுகின்றது.

2. இந்த பரிந்துரைகளை ஆணைக்குழுவுடன் தொடர்ந்து கலந்தாலோசித்து செயற்படுத்தவதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

3. இந்த நோக்கத்திற்காக, செயற்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன:

3.1. ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சீட்டு வடிவிலும் மற்றும் தரவிறக்கம் செய்யக்கூடிய மாதிரியில் உத்தியோகபூர்வ இணையத்தளங்களிலும் இலவசமாகக் கிடைக்கச்செய்யப்படுதல் வேண்டும்.

3.2. பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் (பி.பொ.அ.) மற்றும் முப்படைகளின் கட்டளை அதிகாரிகள் ஆகியோருடன் கலந்தாலோசித்து, ஏற்கனவே நடைமுறையிலுள்ள பொலிஸ் வழிகாட்டல்களை திருத்தி, மேற்குறித்த சிபாரிசுகளை கூட்டிணைத்து பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளும் மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது பற்றி முப்படைகளுக்கு தேவையான புதிய வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்.

3.3. ஆணைக்குழு மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட (IHL) அமைப்பு, பொலிஸ் திணைக்களம், முப்படைகள் என்பவற்றுடனான ஒருங்கிணைப்பை எளிதாக்கல்.

3.4. புதிய வழிகாட்டல்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு வேலையரங்கு-களையும் பயிற்சி அமர்வுகளையும் நடத்துதல்.

3.5. மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் சிபாரிசு செய்யப்பட்ட வழிகாட்டல்கள் பற்றி அரையாண்டிற்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் புத்துணர்ச்சிப் பாடநெறிகளை நடத்துதல்.


3.6. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளும் விஷேடமான மற்றும் பாதிக்கப்படக்கூடிய வகுதி நபர்களை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றி அறிவுறுத்தும் துண்டுப்பிரசுரங்களை தயாரித்து பகிர்ந்தளித்தல்.

3.7. பொலிஸிரினதும் முப்படையினரினதும் அதிகாரிகள் கட்டாயமாக பார்க்கும் வகையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துவது பற்றிய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி 15-30 நிமிடங்கள் அடங்கிய வீடியோக்களை தயாரித்து வழங்குதல்.


3.8. சிபாரிசு செய்யப்பட்ட இந்த வழிகாட்டல்களின் செயன்முறை ரீதியான பயனை முழுமையாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு பொலிஸாரினதும் முப்படையினரினதும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினுள் மிக முக்கியமான பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பயிற்சியை கூட்டிணைத்தல்.

## பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு 1



பின்னிணைப்பு 2




பின்னிணைப்பு 03

பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கை இலக்கம்: 2595/2016
நிருவாக சுற்றறிக்கை இலக்கம்: 12/2016

எனது இலக்கம்: DIG/38C/out/370/2016
பொலிஸ் தலைமை அலுவலகம்
கொழும்பு 01

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள்
பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள்
கட்டளை அதிகாரிகள் (வி.க.ப./கேஜீ.வி.இ.)
பிரிவுக்கு பொறுப்புடைய அதிகாரிகள் (தொழிற்படு, பிராந்திய)
பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள்
(தொழிற்படு, பிராந்திய)
தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள்
/பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள்
யாவருக்கும்:-

**<u>சட்டவிரோதமான ஒரு கூட்டத்தை, வன்முறைக் குழுக்களை கலைக்கும் மற்றும் பொது அமைதி குலையும் சந்தர்ப்பங்களில் எதிர்நடவடிக்கைகளை எடுத்தல்</u>**

சட்டவிரோதமான கூட்டங்களையும், வன்முறைக் குழுக்களையும் கலைக்கும் போதும் மற்றும் சட்டவிரோதமான ஊர்வலங்களைக் கலைக்கும் போதும் பொலிஸ் அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கௌரவ சட்டமா அதிபரின் 14925/16 ஆம் இலக்க 2016.09.19 ஆம் திகதிய கடிதத்தால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்வருமாறு:

01. நீங்கள் அறிந்தவாறு, சட்டவிரோதமான ஒரு கூட்டத்தை அல்லது ஒரு வன்முறைக் குழுவை கலைக்கும் அல்லது பொது அமைதி குலையும் ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்-நடவடிக்கையை எடுப்பது அல்லது ஒரு குற்றம் நிகழ்வதை தடுப்பது பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமையாகும்.

02. பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டவிரோதமான ஒரு கூட்டத்தைக் கலைப்பதற்கு அல்லது பொது அமைதி குலைவதைத் தடுப்பதற்குரிய சட்டநடவடிக்களைகளை எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் வெற்றியளிக்காத அல்லது அவ்வாறு தடுப்பதற்கு சாத்தியமில்லாத பட்சத்தில் மட்டுமே பொது அமைதியை பாதுகாக்கும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சட்டவிரோதக் கூட்டங்களைக் கலைக்கும் அல்லது வன்முறைக் குழுக்களை கலைக்கும் அல்லது பொது அமைதி குலையும் ஒரு சந்தர்ப்பத்தில், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் முகமாக சூழ்நிலைக்கு ஏற்றவாறு சட்டத்திற்கு அமைவாக உரிய செயல்களுக்கு சமவிகித அளவில் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

03. மக்கள் தமது அடிப்படை உரிமகளை அனுபவிக்கும் போது அநேகமாக பொது அமைதி குலைவு ஏற்படும் அல்லது சட்டவிரோதமான கூட்டங்கள் ஆரம்பமாகும் என்பதை விஷேடமாக மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேண்டுமென்று அல்லது எந்தவொரு

விதத்திலும் பொது மக்களுக்குரிய அடிப்படை உரிமைகள் மீறப்படும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது.

04. பொது அமைதி குலையும் சந்தர்ப்பங்களில், செயற்படுத்துவதற்குரிய சட்டமுறை ஏற்பாடுகள் பொலிஸ் கட்டளை சட்டத்திலும் குற்றவியல் வழக்குகள் நடைமுறை சட்டத்திலும் காணப்படுகின்றன.

05. சட்டவிரோதமான கூட்டங்களைக் கலைக்க அல்லது பொது அமைதியைப் பேண பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டமுறையான அதிகாரத் தத்துவங்களுக்கு இணங்க நல்லெண்ணத்துடன் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். பொது மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் கூடாது.

06. பொது அமைதி குலைவதைத் தடுப்பதும் மற்றும் சட்டவிரோதமான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவதைத் தடுப்பதும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒரு அடிப்படையான கடமையாகும். புலனாய்வுத் தகவல்களின் அல்லது நம்பத்தகுந்த தகவல்களின் அல்லது முறைப்பாடுகளின் மூலம் சட்டவிரோதமான கூட்டங்கள் பற்றிய தகவல் கிடைத்ததும், உடனே அத்தகைய கூட்டங்கள் ஏற்பாடு செய்யப் படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தடுப்பதற்கான அத்தகைய நடவடிக்கைகளின் மூலம் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறு குறைக்கப்படுதல் வேண்டும். பொது மக்கள் தமக்குரிய அடிப்படை உரிமைகளை சட்டமுறையாக அனுபவிப்பதற்கு அத்தகைய நடவடிக்கை தடையாக இருத்தல் கூடாது.

07. பொது அமைதி குலைவுக்கு அல்லது சட்டவிரோதமான ஒரு கூட்டத்திற்கு எதிராக எதிர்நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தகைய ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப் படுவதைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளும் வெற்றியளிக்கா விட்டால் மாத்திரே. பல சந்தர்ப்பங்களில், வெற்றிகரமான தொடர்பாடல் சார்ந்த நடவடிக்கைகளின் மூலமாக இத்தகைய கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவதை தடுக்கலாம்.

08. பொது அமைதி குலையும் அல்லது அத்தகைய எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் சரி, பலத்தைப் பிரயோகித்தல் இறுதி மாற்றுவழியாக இருத்தல் வேண்டும். உரிய சூழ்நிலைக்கு ஏற்ப சமவிகித அடிப்படையில், நல்லெண்ணத்துடன் சட்டவிரோதக் கூட்டங்களை அல்லது வன்முறைக் குழுக்களை கலைப்பதற்கும், மக்களையும் மற்றும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும், பொது ஒழுங்கைப் பேணுவதற்கும் மட்டுமே பலம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

09. இலங்கை குற்றவியல் தண்டனை சட்டத்தின் 138 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள சட்டவிரோதமாக ஒன்றுகூடுதல் என்ற குற்றத்தின் வரைவிலக்கணம், குற்றவியல் வழக்குகள் நடைமுறை சட்டத்தின் 95, 96, 97 ஆம் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சட்டவிரோதமான ஒரு கூட்டத்தை கலைப்பதற்கான விஷேட ஏற்பாடுகள் ஆகியன பற்றிய அறிவு சகல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருத்தல் வேண்டும். சட்டவிரோதமான ஒரு கூட்டத்தைக் கலைக்கும் போது, அந்த ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். பொலிஸ் கட்டளை சட்டத்தின் 77 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, சட்டவிரோதமான ஒரு ஊர்வலத்தைக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

10. சட்டவிரோதமான ஒரு கூட்டத்தைக் கலைக்கும் போது, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பலத்தைப் பிரயோகிக்கலாம் என்றிருந்தாலும், சிறந்த தொடர்பாடல் முறையின் ஊடாக பிரச்சினையிலுள்ள சூழ்நிலையை சமாளிக்க இயன்ற சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அந்த முறையியல் வெற்றியளிக்கவில்லையென்றால் மட்டுமே நபர்களின் நடத்தைகள் வன்முறைகள் என்பவற்றுக்கு எதிராக பொலிஸாரால் பலத்தைப் பிரயோகிக்க நேரிடும் என்பதை அறிவிக்க வேண்டும்.

11. உரிய மக்கள் கூட்டத்தின் போது, அதில் விருப்பமில்லாமல் கலந்துகொள்ளும் நபர்கள் இருப்பார்களாயின், பலத்தைப் பிரயோகிக்க முன்னர் அவர்கள் கலைந்து செல்வதற்கு இடமளிக்க வேண்டும். அத்தகைய நபர்களுக்கு ஏதாவது இடையூறு விளைவிக்கக்கூடாது.

12. பலத்தைப் பிரயோகிக்கும் போது, உரிய முறையியல்களும் ஒழுங்குமுறைகளும் பின்பற்றப்படுதல் வேண்டும். உரிய நபர்களுக்கும் அருகிலுள்ளவர்களுக்கும் மிக குறைந்தளவான பாதிப்பு ஏற்படும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். குறைந்த பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் பலத்தைப் பிரயோகித்தும், வெற்றியளிக்காத ஒரு சந்தர்ப்பத்தில், குறைந்த பாதிப்பை விடவும் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் பலத்தைப் பிரயோகிக்கலாம். எது எவ்வாறாயினும், சமவிகித அளவில் நல்லெண்ணத்துடன் அத்தகைய பலத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

13. எக்காரணம் கொண்டும், நபர்களை தண்டிக்கும் அல்லது துன்புறுத்தும் அல்லது கொடூரமாக அல்லது இழிவாக நடத்தும் அல்லது சமவிகிதம் அல்லாத விதத்தில் அத்தகைய பலத்தைப் பிரயோகிக்கக்கூடாது.

03 அறிவுறுத்தல் வகுப்புகளை நடத்தி அந்த வகுப்புக்களில் வாசித்துக்காட்டி மேற்குறித்த விடயங்கள் சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியப்படுத்தப்படுதல் வேண்டும். அதன் பின்னர், ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு தடவை, இந்த சுற்றறிக்கையில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள விடயங்களை மீண்டும் மீண்டும் அவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டும். மேலும், சட்டவிரோதமான ஒரு கூட்டத்தை அல்லது ஒரு ஊர்வலத்தை கலைப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தும் சந்தர்ப்பங்களிலும், சிரேஷ்ட அதிகாரிகள், இந்த சுற்றறிக்கையில் உள்ள விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரைகளை வழங்க வேண்டும்.

ஒப்பம்:  
பூஜித் ஜயசுந்தர  
பொலிஸ்மா அதிபர்

பூஜித் ஜயசுந்தர  
பொலிஸ்மா அதிபர்  
பொலிஸ் தலைமை அலுவலகம்  
கொழும்பு 01.

**Human Rights Commission of Sri Lanka**
இல. 14, ஆர்.ஏ.த மெல் மாவத்தை, கொழும்பு - 04.
**Telephone: +94 11 250 5451**
**Fax: +94 11 2 2505542**
மின்னஞ்சல : sechrcsl@gmail.com website: www.hrcsl.lk
துரித அழைப்பு 1996